பக்கங்கள்:-29

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 24 | ஞாயிற்றுக்கிழமை | 07.07.2024 | அதிர்வு 341

## இளம் குடும்பப் பெண் குத்திப் படுகொலை!

### யாழ்ப்பாணத்தில் பயங்கரம்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம் – கொழும்புத்துறைப் பகுதியில் இரண்டு 06▶



# தமிழர் தலைநகரில் பெருந்தலைவரின் இறுதி நிகழ்வு இன்று



## ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு

தமிழ்த் தேசிய இனத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதி நிகழ்வு தமிழர் தலைநகரான திருகோணமலையில் இன்று நடைபெறவுள்ளது. 06▶

# தொழிற்கட்சியின் பெரு வெற்றி ஈழத்தமிழர் நலன் காக்க உதவும்

## தமிழ் எம்.பிக்கள் அதீத நம்பிக்கை




பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் அமோக வெற்றி ஈழத்தமிழர் நலனில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், எதிர் வரும் காலங்களில் இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள் 06▶




அவர் ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர். நேர்மை – நாணயம் – தமிழ் தேசியம் – போன்றவற்றில் ஒரு பிடிச்சுராவி. அந்தப் பக்கம், இந்தப் பக்கம் ஓர் அங்குலம் விலக இணங்கார். அதனால் கட்சி அரசியலில் நின்று பிடிக்க முடியவில்லை. ஆயினும் அரசியல் அறிவு ஆழம் அதிகம். தமிழ் மொழியிலும் அவரின் சரளம் சிலாகிக்கத்தக்கது.

நேற்று அழைப்பு எடுத்தார். இரண்டு தமிழ் தலைவர்கள் குறித்து விசேடமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

ஒருவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அவர் பற்றிய விடயம்.

“அவருக்கு சுகவீனம் என்று சொல்லுகின்றார்கள். அதைக் காட்டி நாடாளுமன்றத்திலும் விடுமுறை எடுத்துவிட்டார்கள். மூன்று மாதங்களாக அவரின் அசமாத்தமே காணவில்லை. அவரை நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்த மக்களுக்கு 06▶




# தலைநகரில் கொழும்பு இன்று முதல் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்

போரா ஆன்மீக மாநாட்டை முன்னிட்டுக் கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

போரா ஆன்மீக மாநாடுஇன்று முதல் 16 ஆம் திகதி வரை பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசல் மற்றும் இலங்கை கண்காட்சி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்காக இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து சுமார் 15 ஆயிரம் போரா சமூகத்தினர் நாட்டுக்கு வரவுள்ளனர்.

இந்த நிலையில், இன்று முதல் 16 ஆம் திகதி வரை காலி வீதி, கொழும்பு கோட்டை மற்றும் பம்பலப்பிட்டி மரைன் டிரைவிற்குள் பிரவேசிக்கும் பல வீதிகள் சில மணி நேரங்கள் மூடப்படவுள்ளன.

அத்துடன், மாநாடு நடைபெறும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




# திறைசேரி உண்டியல்கள் 10ஆம் திகதி ஏலவிற்பனை

105,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 10 ஆம் திகதி ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளது.

இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.






# நாட்டில் புதிய அரசியல், பொருளாதார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"நாட்டில் புதிய அரசியல் மற்றும் பொருளாதார முறைமையொன்று உருவாக வேண்டும். அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு அச்சமின்றி உண்மையைப் பேசக்கூடிய தலைவர்கள் அரசியல் கட்டமைப்பில் உருவாக வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய வங்கியாளர்கள் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் காலிமுகத்திடல் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட வங்கியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தேசிய வங்கியாளர்கள் ஒன்றியத்தினால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோர் இடையேயான கலந்துரையாடல் அமர்வொன்றும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் – "இன்று நாம் பொருளாதாரத்தில் வெகுதூரம் வந்துவிட்டோம். அன்று ஜெட்விங் ஹோட்டலில் இருந்து இந்த காலிமுகத்திடல் ஹோட்டல் வரை என்ன நடந்தது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பயணத்தில் எனது வீடும் எரிந்து நாசமானது. இன்று ஓரளவு முன்னேற்றத்தை எட்டியுள்ளோம். ஆனால் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாக்காவிட்டால், பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை நான் அப்போதே தெளிவாகக் கூறியிருந்தேன். வங்கிக் கட்டமைப்பு சீர்குலைந்தால், பொருளாதாரமும் நிலைகுலைந்துவிடும்.

அன்று நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் பணியை ஆரம்பித்தோம். இன்று அதன் பெறுபேறுகள் கிடைக்கின்றன. அனைத்துப் பலன்களும் ஒரே தடவையில் கிட்டிவிடாது.

வெளிநாட்டுக் கடன்களை செலுத்த 4 வருடகால அவகாசம் கிடைத்துள்ளதோடு, மீள் செலுத்துகை தொகையிலிருந்து 8 பில்லியன் டொலர் கடன் தொகையை தள்ளுபடி செய்யவும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியடைந்து வருகிறது. இப்போது நாம் ஒரு நாடாக ஒரு மைல்கல் இலக்கை அடைந்துள்ளோம். எமக்கு 8 பில்லியன் டொலர் கடன் நிவாரணம் கிடைத்துள்ளதால், புதிய பொருளாதாரத்திற்கு செல்வதற்கான சுதந்திரமான சூழல் உருவாகியுள்ளது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத் தேவையான சட்டமூலத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம்.

நாம் இங்கிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்குள் வங்கிக் கட்டமைப்பின் வகிபாகம் முக்கியமானது. இதற்கான பணத்தை எவ்வாறு தேடப் போகிறோம்? வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் வங்கிகள் செழிப்படையும். இந்த இலக்கை நாம் இன்னும் அடையவில்லை.

சரிவடைந்த பொருளாதாரத்தை நாம் சரிசெய்து முன்னோக்கிச் சென்றாலும், சீர்குலைந்த அரசியல் கட்டமைப்பு இன்னும் சரி செய்யப்படவில்லை. அன்று சில தலைவர்கள பயந்தோடினர். அதனால் இந்த நாட்டில் அரசியல் தலைமைத்துவம் எவ்வாறானது என்ற கேள்வி எழுகிறது. அத்தகைய தலைவர்களால் நாட்டை முன்னேற்ற முடியுமா? நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லாததன் காரணமாகவே அன்று அவர்கள் பயந்தோடினர்.

முன்னாள் ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் நாட்டின் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஆட்டம் கண்டது. சிலர் என்னை பிரதமர் பதவியிலிருந்து விலகச் சொன்னார்கள். அவ்வாறான அரசியல் முறையுடன் முன்னோக்கிச் செல்ல முடியாது. நாட்டின் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை நாம் சமர்பித்த வேளையில் அதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வழக்குத் தாக்கல் செய்தார்.

"இறக்குமதி அடிப்படையிலான பொருளாதாரம் தேவை" என்று அவரின் மனுவில் கூறப்பட்டுள்ளது. இன்றும் இறக்குமதிப் பொருளாதாரத்தை மையமாக கொண்டு செயற்படு

தொடர்ச்சி▼











# நாட்டில் புதிய அரசியல், பொருளாதார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





தொடர்ச்சி▲

வதாலேயே பொருளாதாரச் சிக்கலை எதிர்கொண்டிருக்கிறோம்.


இன்னும் சிலர் ஆர்ஜென்டினாவின் மார்ட்டின் குஸ்மானைப் பற்றி பேசுகின்றனர். அவர் ஒரு தோல்வியடைந்த தலைவர். அதேபோல் மற்றும் சிலர், உலகம் முழுவதும் சென்று தலைவர்களிடம் பணம் கேட்கச் செல்கிறார்கள். நான் யாசகன் அல்லன். சிங்கள தேசம் பிச்சைக்கார தேசமும் அல்ல. மேலும் சிலர் இறக்குமதி சார்ந்த பொருளாதாரம் தொடர்பில் பல விடயங்களை கூறுகிறார்கள்.

“சர்வதேச நாணய நிதியம் வேண்டாம் என்று கூறியபோதும் பொருளாதார நெருக்கடி இருப்பதை கருத்தில் கொள்ளாமல் எதற்காக வரிகளைக் குறைத்தீர்கள்“ என ஒருநாள் நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கேட்டேன், தொழில் உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கையின் காரணமாகவே அதனைச் செய்ததாகக் கூறினார். அவர் சொன்னதுதான் உண்மை. அதனை நானும் அறிவேன். நீங்கள் ஏன் வரியைக் குறைக்கவில்லை என்றும் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்களை இன்று தேடிக்கொள்ள முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தனிமையில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டத்தை நாம் சரியாகத் தேர்ந்தெடுத்து முன்னேற வேண்டும். கனவுலகில் இருப்பது நல்லதல்ல. உண்மையை அறிந்து செயல்பட வேண்டும். இன்றைய நடவடிக்கைகளே நமது எதிர்காலத்தை தீர்மானிக்கும். நாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகிறோம். புதிய அரசியல் முறைமையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு உண்மை நிலவரத்தை அச்சமின்றி பேசக்கூடியவர்களையும் உருவாக்க வேண்டும். இல்வாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இருக்காது.

நாம் எப்போதும் உண்மையைச் சொல்வோம். அரசியலில் உண்மையைச் சொல்ல அச்சப்பட வேண்டாம். அனைத்து கட்சியினரையும் ஒன்றிணைத்துதான் இந்த அரசாங்கத்தை நடத்தினேன். சில கட்சிகளில் ஒழுக்கம் இல்லாவிட்டாலும் அரசாங்கத்துக்குள் ஒழுக்கம் உள்ளது. அதனால் அச்சமின்றி எம்மோடு இணைந்துகொள்ளுங்கள்.” – என்றார்.



# புதிய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்

"புதிய பொருளாதாரத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்பட்ட கல்வி முறையும் அவசியமானது. அதற்கான கல்விச் சீர் திருத்தங்கள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி – ஹால் டி கோல் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற கல்வி நவீனமயமாக்கலின் புதிய அத்தியாயமாக தென் மாகாணத்தின் 200 பாடசாலைகளுக்கு 2,000 நவீன வகுப்பறைகள் மற்றும் 2,000 டப் கணனிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்திர் ரமேஷ் பத்திரன இந்திய அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய தென் மாகாண சபைக்கு கிடைத்த 3,000 லட்சம் ரூபாய் (30 கோடி) நிதி ஒதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைகளில் 150 பாடசாலைகள் காலி மாவட்டத்திலும் ஏனைய 50 பாடசாலைகள் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

ஒரு வகுப்பறைக்கு 10 டப் கணினிகள் என்ற வகையில் 200 வகுப்பறைகளுக்கு 2,000 டப் கணினிகள் வழங்கப்பட்டன. இதன் அடையாள அம்சமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய உயர்ஸ்தானிகர் சந்தூஷ் ஜாவிற்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

"தற்போது உலகம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறி வருகிறது. அதற்கேற்ப, இந்நாட்டின் கல்வி முறையும் நவீன தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் அமைச்சினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்று நாம் பல கல்விக் கொள்கைகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினோம். அந்தக் கல்விக் கொள்கைகள் அன்றைய காலத்திற்கு ஏற்றதாக இருந்தாலும், இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால், கல்வித் துறையில் புதிய சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது பாடசாலைகளில், செயற்கை நுண்ணறிவுக் கழகங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் கல்வியை தொடங்கி சில வருடங்கள் ஆகிறது. இந்த ஆண்டு நாம் ஆரம்பித்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படும். அதற்குத் தேவையான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிளை அரசாங்கம் ஏற்படுத்தும். மத்திய கல்லூரிகள் மற்றும் தேசிய பாடசாலைகள் செயற்கை நுண்ணறிவுப் பாடசாலைகளாக மேம்படுத்தப்பட வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துடன் முன்னேறுவதில் அண்டை நாடான இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்கு ஐ.ஐ.டி. தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவுடன் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன.

மலேசியாவில் நான் எலான் மஸ்குடன் கலந்துரையாடினேன். அவரது நிறுவனத்தின் இணையத் தொழில்நுட்பம் நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் தொலைதூர கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்வி வழங்கும் வாய்ப்பு கிடைக்கும். இன்று தென் மாகாணம் கல்வித்துறையில் அதீத திறமைகளை வெளிப்படுத்தும் மாகாணமாக மாறியுள்ளது. தென் மாகாணத்தின் முதலாவது டச்சு பாடசாலையான பத்தேகம கல்லூரி இன்று தேசிய பாடசாலையாக மாறியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிர்காலத்திற்கு ஏற்ற சந்ததியை உருவாக்கி ஒரு நாடாக உலகையே வெல்லும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது." – என்றார்.








## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரின் நிலைமை பற்றி தெளிவுபடுத்தல் வழங்க வேண்டியது அவரது கட்சியின் கடமை. மூன்று மாதமாக அவரை காணாத நிலையில் கட்சி 'அமானுஷ்ய அமைதி' பேணுவது பல வதந்திகளுக்கு வால் கட்டி விட்டிருக்கின்றது. கொள்கை, கோட்பாடு பேசும் கட்சிக்கு, மக்களுக்கு அவர்களின் பிரதிநிதியின் நிலைமை பற்றிய தெளிவுபடுத்தலை வழங்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் இருப்பது பற்றிய கோட்பாடு புரியாமல் போனமை விந்தையே. உத்தியோக பூர்வமாக கட்சியிடம் கேட்டு பதிலை எழுதுங்கள்." – என்றார்.

அவர் கூறியது சரியாகவே பட்டது. "முயற்சிப்பேன்!" என்றேன்.

அடுத்து, தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா பற்றிப் பேசினார்.

"சுமந்திரன் இப்போது ஜனாதிபதியுடன் ஆரம்பித்திருக்கும் பேச்சு முன்நகர்ந்தால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தல்தான் முதலில் வரும் போல தெரிகின்றது. தேர்தல் வந்தால் வடக்கு மாகாண சபையின் தமிழரசு முதல்வர் வேட்பாளர் யார்?" – என்று கேட்டார். பின்னர் தாமே 'மாவை தான்.' என்று குறிப்பிட்டார்.

நான் ஒரு நக்கல் சிரிப்புச் சிரித்தேன்.

"அவருக்கு வயதாகி விட்டது. தளர்ந்து வருகின்றார். அவரின் பேச்சுகளிலேயே கருத்துக் குழப்பம் வந்துவிட்டதே" என்றேன்.

இப்போது அவர் பதிலுக்கு நக்கல் சிரிப்பு சிரித்தார்.

"அமெரிக்கா பெரிய நாடு. அதன் தலைமை என்பது உலகத்தின் தலைமை போன்றது. அந்தத் தலைமைக்குப் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனுக்கு என்ன வயது? மாவையின் வயதுதான். அவரைவிட மாவை ஆக ஒரு மாதம்தான் வயதால் மூத்தவர். அந்த அமெரிக்காவுக்கே அந்த வயதில் பைடன் மீண்டும் ஜனாதிபதியாக முயற்சிக்கலாம் என்றால் வடக்குக்கு ஏன் மாவை முதலமைச்சராக வரக்கூடாது?" – என்று கூறி மேலும் நையாண்டித்தனமாக சிரித்தபடி தொலைபேசியை துண்டித்து விட்டார் அவர்.

அவர் உண்மையில் அந்தக் கருத்தைக் கூறினாரா அல்லது நக்கல், நையாண்டிக்கு அப்படிச் சொன்னாரா என்று தெரியவில்லை. எது, எப்படி என்றாலும், இந்தப் பத்திச் செய்தியை மாவை வாசித்தார் என்றால் ஒரு தடவை தூக்கி வாரிப் போட்டு எழுந்திருப்பார் என்று மட்டும் நிச்சயம்.

## இளம் குடும்பப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகளின் தாய் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திவிகரன் நிஷானி என்ற 29 வயதான பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறை – ஏவி வீதி, மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீட்டிலேயே நேற்று இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்தின் அடிப்படையில் பெண்ணின் கணவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொழிற்கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன முன்னேற்றகரமான மட்டத்தை நோக்கி நகரும் எனவும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிற்கட்சி அமோக வெற்றியீட்டியிருக்கும் நிலையில், இந்த வெற்றி இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதிலும் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாகத் தொழிற்கட்சி உறுப்பினர்கள் பலர் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன் அதனை முன்னிறுத்தி சர்வதேச தளங்களில் அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றனர். அதுமாத்திரமன்றி இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பிரிட்டன்வாழ் ஈழத்தமிழ் பெண்ணான உமா குமாரனும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் 14 வருடங்களுக்குப் பின்னர் பிரிட்டனில் நிகழ்ந்திருக்கும் இந்த ஆட்சி மாற்றம் ஈழத்தமிழர் நலனில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அதன்படி இது பற்றிக் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், பிரிட்டனில் தொழிற்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியமையை தமிழர்கள் பெரிதும் வரவேற்பதாகத் தெரிவித்தார். அத்தோடு கடந்த காலங்களில் தான் தொழிற்கட்சி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய வேளைகளில் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நன்கறிந்திருந்தனர் எனவும், பொறுப்புக்கூறலின் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர் எனவும் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

"ஆங்கிலேயர்கள் இலங்கையை விட்டு வெளியேறியபோது, வடக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்களைக் கருத்தில்கொண்டு நியாயமானதொரு அதிகாரப் பகிர்வை வழங்காததன் காரணமாக, இவ்விடயத்தில் அவர்கள் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே எதிர்வருங் காலங்களில் தொழிற்கட்சி தலைமையிலான அரசு தமிழ்மக்களின் நலனை முன்னிறுத்தி குரலெழுப்பும் என நம்புகின்றேன். அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரிலும், அதன் பின்னரும் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை இலக்காகக்கொண்ட செயற்பாடுகளை அவர்கள் முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும்." – என்றும் விக்னேஸ்வரன் எம்.பி. வலியுறுத்தினார்.

அதேவேளை, பிரிட்டனின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கெய்ர் ஸ்டார்மருக்கு தமிழ் மக்கள் சார்பில் வாழ்த்துத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தொழிற்கட்சி உறுப்பினர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் சார்ந்து அக்கறையுடன் கருத்துக்களை வெளியிட்டுவந்திருப்பதன் காரணமாக, இனப்படுகொலை தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பன எதிர்வருங்காலங்களில் முன்னேற்றகரமான நிலையை நோக்கி நகரும் என எதிர்பார்ப்பு வெளியிட்டார்.

அத்தோடு கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பிரிட்டன் தூதுவரைச் சந்தித்த போது அரசியல் தீர்வு குறித்த அவரது கேள்விக்கு, "சமஷ்டி அடிப்படையிலான நியாயமான தீர்வு அவசியம்" எனத் தான் பதிலளித்தார் எனவும், அதனை அவர் கரிசனையுடன் கேட்டுக்கொண்டார் எனவும் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

ஆகவே, எதிர்வரும் காலங்களில் சர்வதேச விசாரணையை ஊக்குவிக்கும் வகையிலும், இலங்கை தொடர்பான தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்லும் விதமாகவும் பிரிட்டன் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் தொழிற்கட்சியைப் போன்றே கொன்சவேட்டிவ் கட்சியும் கடந்த காலங்களில் தமிழர் விவகாரத்தில் முனைப்புடன் செயலாற்றி வந்திருக்கின்றது எனவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டிய இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், எனவே தொழிற்கட்சியின் வெற்றியால் மாற்றமொன்று நிகழுமெனில், அது தமிழர்களுக்கு மேலும் சிறந்த மாற்றமாகவே அமையும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

## தமிழர் தலைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் அன்னாரின் திருகோணமலை இல்லத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று நண்பகல் 12 மணிக்கு முன்பாக இறுதி அஞ்சலிகளைச் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றார்கள். சமயச் சடங்குகள் அதன்பின் ஆரம்பமாகும். அஞ்சலிக் கூட்டமும் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி அன்னாரின் புகழுடல் தகனத்துக்காக மாலை 3 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

# கோர விபத்தில் குடும்பஸ்தர் பலி

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் மோட்டார் சைக்கிளும் கப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பரந்தன் பகுதியில் இருந்து பூநகரி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கிளிநொச்சி, கோனாவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில், உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த விபத்தில் கப் ரக வாகனத்தில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.




விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 78 வயது மூதாட்டி கொலை: 17 வயது மாணவன் கைது!

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொரவல ஆற்றில் 78 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த குற்றச்சாட்டில் 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை, முகுனுமலை பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பலாங்கொடை, முகுனுமலை பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் கடந்த 27ஆம் திகதி தொரவல ஆற்றில் நீராடச் சென்ற சந்தர்பத்தில் அந்த ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி பெண்ணின் பிரதே பரிசோதனை பலாங்கொடை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.

பெண்ணின் மரணம் தொடர்பாக வைத்தியர்களுக்குச் சந்தேகம் இருந்துள்ளது. இந்த விடயம் குறித்து பொலிஸாருக்கு அவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து மேற்படி பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகம் இருக்கின்றது என்று பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினர்.

அதன்பின்னர் பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதி பாக்யா தில்ருக்ஷி விக்ரமசிங்க விசேட சட்ட வைத்தியரிடம் மீண்டும் மேற்படி பெண்ணின் பிரதே பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

விசேட சட்ட வைத்தியர் ரத்நாயக்க தலைமையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் குறித்த பெண் பல தடவை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கழுத்து நெறிக்கப்பட்டு மூச்சுத் திணறிய நிலையில்உயிழந்துள்ளார் என்று கண்டறியபட்டது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் பலாங்கொடை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சம்பந்தனின் சகாப்தம்

வரலாற்றிலிருந்து - அனுபவத்திலிருந்து - பட்டறிவிலிருந்து - பாடங்களைப் படித்து தன்னை நேர்ப்படுத்திக் கொள்ளாதவன் உருப்பட முடியாது. உருப்பட்டதாக வரலாறும் கிடையாது.

கடந்த ஒன்றரை தசாப்த காலம் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரில்லாத் தலைவராக தன்னை நிலைநிறுத்தியிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் இன்று தமது இறுதி யாத்திரையுடன் நம்மை விட்டுப் பிரிகின்றார்.

சம்பந்தன் சகாப்தம் முடிவுக்கு வருகின்றது. அந்த சகாப்தத்தின் முன்மாதிரி மூலம் தமிழ் சமூகம் என்ன பட்டறிவை பெற்றிருக்கின்றது, அந்த அனுபவத்தை நமது இனத்தின் முன்னேற்றத்திற்கு நாம் எப்படிக் கையாளப் போகின்றோம் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

தமிழர்களின் தலைமைத்துவம் தொடர்பாக சம்பந்தன் விட்டு செல்லும் செய்தி என்ன? தமிழ்த் தேசியத்தின் அடுத்த தலைமைத்துவத்தை கைகாட்ட மறுத்த சம்பந்தன், தமிழினம் தனக்குரிய தலைமையை உரிய காலத்தில், உரிய முறையில் தேர்வு செய்யும் என்று விட்டேத்தியாகக் கூறிச் சென்றதன் அர்த்தம் என்ன? அதற்குள் புதைந்து கிடக்கும் விடயம் யாது?

தலைமைத்துவம் தொடர்பாக தமது முன்மாதிரிச் செயற்பாடு மூலம் ஒரு படிப்பினையை - வழிகாட்டலை - தமிழினத்திற்கு அவர் விட்டுச் சென்றிருக்கின்றார் என்பதே அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

சம்பந்தனின் மறைவை ஒட்டி தமிழர் தரப்பின் இரண்டு மூத்த - பழுத்த - அரசியல்வாதிகள் வெளியிட்ட அனுதாபச் செய்திகளுக்குள் தலைமைத்துவம் தொடர்பான சம்பந்தனின் முன்மாதிரி புதைந்து கிடப்பதை நாம் காணலாம்.

தந்தை செல்வா, தேசியத் தலைவர் பிரபாகரன், சம்பந்தன் என்ற தனிமனித தலைமைத்துவ சகாப்தத்தின் கடைசித் தலைவர் சம்பந்தன் என்று ஈண்டு குறிப்பிட்டிருக்கின்றார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

1980களை ஒட்டி, இந்திய அரசுடன் நடைபெற்ற தீர்வு முயற்சிகளில் மறைந்த தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோருடன் சம்பந்தனும் இணைந்திருந்து 'மூவர் தலைமையாக' அந்த நடவடிக்கைகளைக் காத்திரமாக முன்னெடுத்துப் பங்களித்தமையை தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா சுட்டியிருக்கின்றார்.

இந்த இருவரும் சம்பந்தனின் தலைமை குறித்துக் கோடி காட்டிய குறிப்பின் ஊடாக சம்பந்தனின் தலைமையை - சகாப்தத்தை - நாம் நோக்க வேண்டும்.

70களின் பிற்பகுதி முதல் 80களின் பிற்பகுதி வரையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'கூட்டுத் தலைமை'யில் அமிர்தலிங்கத்துடனும் சிவசிதம்பரத்துடனும் ஒத்துழைத்துக் கூட்டாக, இணைந்து பணியாற்றி இருக்கின்றார் அவர்.

பின்னர் மிலேனியத்தின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிமிகு சக்தியாக விடுதலைப் புலிகள் விஸ்வரூபம் எடுத்து நின்றபோது புலிகளின் ஏக தலைமையை அங்கீகரிப்பது யதார்த்தப் புற நிலைக்கும் தமிழினத்தின் எதிர்காலத்திற்கும் மிகப் பொருத்தமான நடவடிக்கை என்று கருதி, முன்னர் தாம் செயற்பட்ட கூட்டுத் தலைமையினின்றும் கீழ் இறங்கி வந்து, புலிகளின் ஏகத் தலைமையை அங்கீகரித்து, அதற்கு இணக்கமாக ஒரு தசாப்த காலம் செயற்பட்டார்.

அதன் பின்னர் 2009 இல் காலம் இட்ட கட்டளையாக - நிகழ்வுகளின் கோலமாக - தமிழினத்தின் தேசிய கட்சிகளுக்கு தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு தமது மடியில் தேடி வந்து விழுந்த போது அதனை ஏற்று, சுமார் ஒன்றரை தசாப்த காலம் அவர் தனித்துவ தலைமைத்துவத்தை முன்னெடுத்தார்.

களப்புற யதார்த்தங்களுக்கு ஏற்ப கூட்டுத் தலைவராகவும், இன்னொரு வலிமையான தலைமைக்கு கட்டுப்பட்டவராகவும், பின்னர் தனித்துவமான ஏக தலைவராகவும் விளங்கியவர் அவர்.

தானே தன்னிகரில்லாத் தலைவர் என்று அவர் அடம் பிடித்து நிற்கவில்லை. அப்படி நின்றிருந்தால் அவர் அரசியலில் அடிபட்டு அரசியல் குப்பை கூடைக்குள் கடாசித் தூக்கி வீசப்பட்டிருப்பார். மாறாக நிலைமைகளையும் யதார்த்த சூழல்களையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப தலைமைத்துவ மாண்பை அவர் வெளிப்படுத்தினார். அதனால் மெச்சப்படுகின்றார்.

# சேலம் அ.தி.மு.க. பிரமுகர் கொலை வழக்கு: பெண் கவுன்சிலர் உள்பட 4 பேருக்கு வலை





சேலத்தில் அ.தி.மு.க. பிரமுகர் கொலை வழக்கில் தி.மு.க. பெண் கவுன்சிலர் உள்பட நான்கு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சேலம், தாதகாபட்டி காமராஜர் நகரை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகரும், மாநகராட்சி மண்டலக் குழு முன்னாள் தலைவருமான சண்முகத்தை கடந்த 3 ஆம் திகதி மாரியம்மன் கோயில் தெருவில் மர்ம கும்பல் வெட்டி கொலை செய்தது. இது சம்பந்தமாக அன்னதானப்பட்டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

பொலிஸார் விசாரணையில் 55 ஆவது வார்டு தி.மு.க. பெண் கவுன்சிலர் தனலட்சுமியின் கணவர் சதீஷ்குமாருக்கும், சண்முகத்துக்கும் இடையே மாரியம்மன் கோயில் டிரஸ்ட்டி தலைவர் பதவி பெறுவதிலும், சாலை ஒப்பந்த பணி எடுப்பது தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்தது. மேலும், சதீஸ்குமார் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அரசால் தடை செய்யப்பட்ட லொட்ரி விற்பனையில் ஈடுபட்டு வந்தது சம்பந்தமாக சண்முகம் காவல் நிலையத்தில் புகார் அளித்து இருந்தார்.

இதன் காரணமாக சதீஸ்குமார் கூட்டாளிகள் சண்முகத்தை வெட்டி கொலை செய்தார் என தெரியவந்தது. இந்த கொலை வழக்கில் சதீஸ்குமார் உள்பட பத்து பேரை பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த கொலை வழக்கில் தி.மு.க. பெண் கவுன்சிலர் தனலட்சுமிக்கு தொடர்பு இருப்பதை கண்டறிந்த பொலிஸார் அவர் மீதும் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர். மேலும், இந்த கொலை வழக்கில் தொடர்புடைய தாதகாப்பட்டியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, அஜித், மகேஸ்வரன், தனலட்சுமி ஆகிய நான்கு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# ஆம்ஸ்ட்ராங் படுகொலை வழக்கில் கைதான 8 பேர் தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியீடு





பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில், திருநின்றவூரைச் சேர்ந்த மூவர், காட்பாடியைச் சேர்ந்த இருவர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில், பொன்னை பாலு என்பவர் மீது ஏற்கனவே 8 வழக்குகள் இருக்கின்றன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்.

"நேற்று முன்தினம் மாலை, செம்பியம் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பெரம்பூர் வேணுகோபால் சாமி கோவில் தெரு வீட்டின் முன்பு பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் (வயது 52) என்பவர் நின்று கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்களால் கத்தியால் தாக்கப்பட்டு, ரத்தக் காயமடைந்தவரை அங்கிருந்த நபர்களுடன் பொலிஸார் துரிதமாக செயல்பட்டு சென்னை அப்பலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தபோது அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் இறந்துவிட்டார் என தெரிவித்தனர்.

இது குறித்து அவரது சகோதரர் வீரமணி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் செம்பியம் பொலிஸ் நிலையத்தில் வழக்குபதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது. மேற்படி கொலைக்கான காரணத்தைக் கண்டறிந்து, சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவின் பேரில் கூடுதல் பொலிஸ் ஆணையர் (வடக்கு) ஆஸ்ரா கர்க், தலைமையில் 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தீவிரமாக குற்றவாளிகளைத் தேடிவந்தனர்.

தனிப்படை பொலிஸார் தீவிர விசாரணை செய்து மேற்படி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட காட்பாடியைச் சேர்ந்த பொன்னை பாலு (வயது 39), பெரம்பூரைச் சேர்ந்த திருமலை (வயது 45), திருவள்ளூர் ஆர்.கே.பேட்டை தாலுகாவைச் சேர்ந்த மணிவண்ணன் (26), குன்றத்தூரைச் சேர்ந்த திருவேங்கடம் (வயது 33), திருநின்றவூரைச் சேர்ந்த ராமு (எ) வினோத் (வயது 38), காட்பாடியைச் சேர்ந்த சந்தோஷ் (வயது 22), திருநின்றவூரைச் சேர்ந்த அருள் (வயது 33) மற்றும் செல்வராஜ் (வயது 48) ஆகிய 8 நபர்களை நேற்று கைது செய்தனர்.

மேலும், விசாரணையில் கைது செய்யப்பட்ட பொன்னை பாலு மீது 8 வழக்குகளும், திருமலை மீது 7 வழக்குகளும், திருவேங்கடம் மீது 2 வழக்குகளும் உள்ளன என தெரியவந்தது. மேலும் திருமலை என்பவர் திரு.வி.க நகர் போலிஸ் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி ஆவார். விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட 8 நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சென்னை மாநகர பொலிஸ் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில்.

"இதுவரையிலான விசாரணையின்படி, 8 பேரும் குற்றவாளிகள் என முடிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் தொடர் விசாரணை நடந்து வருகிறது. மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய பிற குற்றவாளிகளையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவத்தின்போது, ஆம்ஸ்ட்ராங் உடன் இருந்த அவருடைய சகோதரர் வீரமணி மற்றும் அவருடைய நண்பர் பாலாஜி மற்றும் டிரைவர் அப்துல்கனி ஆகியோரும் தாக்குதலில் காயமடைந்துள்ளனர். அவர்களுக்கு உயர் சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. இப்போது நிலைமை அங்கு கட்டுக்குள் உள்ளது. மேலும், முக்கியமான இடங்களில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கொலை வழக்கில் கைதானவர்களிடம் நடத்திய விசாரணையில் நிறைய தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தக் கொலைக்கான காரணம், யாருக்கெல்லாம் தொடர்பு உள்ளது, என்ன மாதிரியான ஆயுதங்கள், வாகனங்கள் எல்லாம் பயன்படுத்தப்பட்டது போன்ற விவரங்களை எல்லாம் விசாரித்து வருகின்றனர். இந்த வழக்கில் சரியான முறையில் விசாரித்து, நீதிமன்றத்தில் தண்டனைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன," என்றார்.



# பிரித்தானிய புதிய அமைச்சரவையில் அதிக பெண் பிரதிநிதிகள் நியமனம்

பிரித்தானியாவின் புதிய பிரதமரான கியர் ஸ்டாமர் தமது புதிய அமைச்சரவையை நியமித்துள்ளார்.

அதற்கமைய பிரித்தானிய வரலாற்றில் முதல் பெண் நிதியமைச்சராக ரேச்சல் ரீவெஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 45 வயதுடைய அவர், பொருளியலில் நிபுணத்துவம் பெற்றவராவார்.

பிரித்தானியாவின் துணை பிரதமராக Angela Rayner நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி அமோக வெற்றிபெற்றதையடுத்து அக்கட்சியின் தலைவர் கியர் ஸ்டாமர் பிரித்தானிய பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்.

பக்கிங்ஹம் அரண்மனையில் மன்னரைச் சந்தித்து உரையாடிய பின்னர் அவர் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் தலைமையில் பிரித்தானிய வரலாற்றில் அதிகளவான பெண் அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரை தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஸ்டாமர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் ஆசிய வம்சாவளியைச் சேர்ந்த 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

மேலும் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளு மன்றத்தில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த 89 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு ஆயுத போர் தொடர்பில் விளாடிமிர் புடின் எச்சரிக்கை

உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்வதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விட வேண்டாம் எனவும் ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் இந்த போர் விரைவில் அணு ஆயுத போராக மாறிவிடும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டில் உக்ரைன் மீது போர் தொடுத்தது.

உக்ரைனை எளிதில் கைப்பற்றிவிடலாம் என நினைத்து போரை தொடங்கிய ரஷ்யாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியதுடன் தற்போது வரை போர் தொடர்கின்றது.

உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதால் ரஷ்யாவுக்கு கடும் சவாலை உக்ரைன் அளித்து வருகிறது.

இதனால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த போர் நீடித்து வருவதுடன், தற்போது இந்த போரின் போக்கு தற்போது ரஷ்யாவுக்கு சாதகமாக சென்று கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக இந்த போரில் தங்கள் இலக்கை எட்டுவதற்கு அணு ஆயுதத்தை பயன்படுத்துவதற்கான தேவை இருக்காது என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, ரஷ்யா அணு ஆயுதத்தை பயன்படுத்தாது என மேற்கத்திய நாடுகள் நினைப்பது தவறு எனவும் ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்வதில் நேட்டோ நாடுகள் தங்கள் எல்லையை மீறி விட வேண்டாம் எனவும் ரஷ்யாவுடன் மோதல் ஏற்பட்டால் இந்த போர் விரைவில் அணு ஆயுத போராக மாறிவிடும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஐரோப்பா நோக்கிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்து; 89 பேர் பலி

ஐரோப்பா நோக்கிச் சென்ற புலம்பெயர்ந்தோர் படகு மொரிட்டானியா கடற்கரையில் மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், 170 பேர் பயணித்த இந்த படகில் 89 உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், 89 புலம்பெயர்ந்தோரின் உடல்களை கடலோரக் காவல்படையினர் மீட்டுள்ளதாக மொரிடானியாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதில், ஐந்து வயது சிறுமி உட்பட ஒன்பது பேர் மீட்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் கேனரி தீவுகளை அடைய முயன்ற போது 5,000 புலம்பெயர்ந்தோர் கடலில் இறந்தனர் என இடம் பெயர்வு உரிமைகள் குழுவான வாக்கிங் பார்டர்ஸ் கடந்த ஜூன் மாதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சம்பந்தனின் இடத்தை ஈடுசெய்வது மிகப்பெரிய சவால் நிறைந்த ஒன்று

## உலத் தமிழர் பேரவை தெரிவிப்பு

பல தசாப்தங்களாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் நீதி, சமத்துவம், அங்கீகாரம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் முகமாக இருந்து வந்தவர் சம்பந்தன். அந்தப் பேராளுமையின் இடத்தை புதிய, தகைமையுள்ள தலைவர் ஒருவரால் ஈடுசெய்வதென்பது மிகப்பெரிய சவால் நிறைந்த ஒன்று. புதிய தலைவர் சம்பந்தனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தமிழர் நலன்களுக்காக இடைவிடாமல் குரல் கொடுப்பதுடன், ஒட்டு மொத்த நாட்டின் நலனுடன் பயணிப் பவர்களை ஒருங்கிணைத்துக் செயற்படுவார் என்று உலத் தமிழர் பேரவை நம்புகிறது.

மூத்த தமிழ் அரசியல் தலைவர் இரா. சம்பந்தன் மறைவு குறித்து உலகத்

தமிழர் பேரவை அஞ்சலி தெரிவித்துள்ளது.

அந்த அஞ்சலியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது மூத்த தமிழ் அரசியல் தலலவர் இரா. சம்பந்தனின் மறைவு உலகத் தமிழர் பேரவையை ஆழ்ந்த கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது. அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவனவருக்கும் நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசியல் வானில் நீண்ட காலம் பிரகாசித்தவர் சம்பந்தன். 36 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், 2015-2018 வரை எதிர்க் கட்சித் தவலவராகவும் பணியாற்றியதோடு, கடந்த 23 வருடங்களாகத் தமிழ்த் தேசியக்

தொடர்ச்சி▼

# சம்பந்தனின் இடத்தை ஈடுசெய்வது மிகப்பெரிய சவால் நிறைந்த ஒன்று

## உலத் தமிழர் பேரவை தெரிவிப்பு



தொடர்ச்சி▲

கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கி நடத்தியும் வந்தார்.

தமிழரது உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துவந்த சம்பந்தன், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு கிடைக்க வேண் டும் என்பதற்காகத் தனது அரசியல் வாழ்வை முழுவமயாக அர்ப்பணித்தவர்.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் அரசியல் எப்போதும் சிறந்த தலைவர்களின் சேவைகளைப் பெற்று வந்திருக்கிறது. ஐம்பதுகள் முதல் எழுபதுகள் வரை சிறுபான்மை இனங்களின் மீது சிங்கள பௌத்த தேசியம் ஆதிக்கம் செலுத்திவந்த போது தமிழ்ச் சமூகம் எஸ் .ஜே.வி. செல்வநாயகம் போன் ற முன்னாள் தலைவர்களால் வழிநடத்தப்பட்டு வந்தது.

இன ஆதிக்க அரசின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அவர் தமிழ் மக்களை ஒன்றிணைத்துக் காந்தீய பாதையில் அஹிம்சை வழிப் போராட்டங்களை முன்னெடுத்து வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு பேச்சு வார்த்தை மூலம் ஒரு சுயாட்சியைப் பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொண்டார்.

இந்த பலமான, அர்ப்பணிப்புள்ள தலைமைத்துவம் எழுபதுகள் எண் பதுகளின் போதும் மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்தின் கீழ் தொடர்ந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் அரச ஒடுக்கு முறையும் ஆயுதக் கிளர்ச்சியும் தமிழ் மக்களின் வாழ்வை ஆக்கிரமிக்க ஆரம்பித்தன. இந்தக் கொந்தளிப்பான போர் காலகட்டத்தில்தான் சம்பந்தன் ஒரு முக்கிய, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைவரானார்.

2009 இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததும் தமிழ் சமூகம் முன்னெப்போதும் இல்லொத சவால்களை எதிர் கெண்டது. எண்ணற்ற உயிர்களையும் உடமைகளையும் மட்டுமன்றி நம்பிக்கையையும் அது இழந்திருந்தது. வெற்றி கொண் ட இனவாத பேராண்மை அரசு இந்தச் சந்தர்ப்பத்தைக் கபளீகரம் செய்து மென்மேலும் தமிழர்களை ஓரங்கட்டத் தொடங்கியது. சர்வதேச சமூகம் தமிழ்த் தலைமைகளை அவர்களின் கடந்த கால மற்றும் எதிர் கால அரசியல் நிழ்ச்சி நிரல் குறித்து இரு மனப் போக்குடன் பார்த்தது.

இந்த முக்கியமான காலகட்டத்தை சம்பந்தன் சிறப்பாக வழிநடத்திக் கவனமாகக் கணக்கிட்டுச் செய்த முயற்சிகள் மற்றும் நடைமுறை அரசியல் வேலைத் திட்டத்தின் மூலம் தமிழ் அரசியல் தலைமையை உறுதிப்படுத்தி மீளக் கட்டியெழுப்பினார். இதில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய முக்கிய நிகழ்வாக 2015 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்புலத்தில் சம்பந்தன் எடுத்துக் கொண்ட வகிபாகத்தைக் கூறமுடியும்.

போரால் தமிழர் சந்தித்த இழப்புகளில் இருந்து சற்று ஆசுவாசம் பெற்று இயல்பு வாழ்வுக்குத் திரும்ப அவரது முயற்சிகள் பெரிதும் வழிகோலின.

தமிழர்களின் தேவைகளை மிகவும் ஆணித்தரமாக முன்வைக்கும் அதே வேளையில் பெரும்பான்மைச் சமூகத்தின் அச்சங்களையும், கரிசனைகளையும், நாட்டின் தேவைகளையும் கருத்தில் கொள்வது சம்பந்தனின் தனித்துவமான பண்பு. இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றையும் தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைவர்கள் கடந்த காலத்தில் வழங்கிய பல நிறைவேற்றாத வாக்குறுதிகளையும் முன்வைத்து, அரசியல் தீர்வுக்காகச் சம்பந்தன் சிறப்பாக வாதிட்ட எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதே மூச்சில், தமிழர்களுக்கான சம உரிமைக்கான கோரிக்கைகள் ஒரு ஒன்றிணைந்த பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டுக்குள் அடைய முடியும் என்பதை அவர் ஒரு போதும் குறிப்பிடத் தவறவில்லை.

போரின் போது இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்குத் தீர்வு காண் பதில் இலங்கை விருப்பம் காட்டாத போது, நாட்டில் மனித உரிவமகள் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக 2012 முதல் இலங்கையை ஐ. நா. மனித உரிவமகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்வதில் முக்கிய தலைமைத்துவம் வழங்கியவர் அவரே.

அதேபோன்று, 2018 இல் அரசியலமைப்பு நெருக்கடியில் இலங்கை முடங்கியபோது, சம்பந்தன் நாட்டின் நலனை மனதில் வைத்து நிலைமையை மேற்கொள்வதற்குக் கொள்கை ரீதியான தலைமைத்துவத்தை வழங்கினார்.

இலங்கையிலும் சர்வதேச அரங்குகளிலும் சம்பந்தன் பெரிதும் மதிக்கப்படுவதற்கு அவரது இப்படியான உயரிய பண்புகளே காரணம். இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களின் தலைவர்களாலும், பல நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்களாலும், இராஜதந்திரிகளாலும் சம்பந்தன் பெற்ற பெரும் பாராட்டுகளை உலகத் தமிழர் பேரவை பல சந்தர்ப்பங்களில் பார்த்ததுண்டு.

சம்பந்தனின் வாழ்வு காலத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவேண்டும் என்ற விருப்பம் இலங்கையிலும் சர்வதேச அரங்குகளிலும் அடிக்கடி எதிரொலிக்கப்பட்டு வந்திருக்கிறது. சந்தேகத்துக்கு இடமின்றி இது சம்பந்தன் மீது அவர்கள் கொண்டிருந்த மரியாதையையும் அபிமானத்தையும் எடுத்துக் காட்டுவதோடு, இலங்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தமிழ் தலைவர்கள் வரிசையில் அவர் இடம்பெற்றிருக்கிறார் என்பதையும் குறிக்கும்.

ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால், சம்பந்தன் இனி நம்மிடையே இல்லை, இலங்கை யும் காலங் காலமாகத் தேசியப் பிரச்சினையை அனைத்து சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் இன்னமும் தீர்க்கவில்லை.

பல தசாப்தங்களாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் நீதி, சமத்துவம், அங்கீகாரம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் முகமாக இருந்து வந்தவர் சம்பந்தன். அந்தப் பேராளுமையின் இடத்தை புதிய, தகைமையுள்ள தலைவர் ஒருவரால் ஈடுசெய்வதென்பது மிகப்பெரிய சவால் நிறைந்ததொன்று. புதிய தலைவர் சம்பந்தனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தமிழர் நலன்களுக்காக இடைவிடாமல் குரல் கொடுப்பதுடன், ஒட்டு மொத்த நாட்டின் நலனுடன் பயணிப்பவர்களை ஒருங்கிணைத்துக் செயற்படுவார் என்று உலத் தமிழர் பேரவை நம்புகிறது.

மறுபுறம், இலங்வகயிலுள்ள அவனத்து சமூகங்களும், குறிப்பாகப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வளவு நீண்ட காலமாகத் தேசியப் பிரச்சினைக்கு நியாயமானதும் நிலையானதுமான தீர்வைக் காணத் தவறியதன் காரணத்தை ஆழமாகச் சிந்தித்து அறிதல் வேண்டும்.

“தேசியப் பிரச்சினை” என்று மறைந்த சம்பந்தன் அடிக்கடி குறிப்பிட்ட விடயத்துக்கு நல்லெண் ணத்துடனும் நேர்மையுடனும், நீதியான மற்றும் நியாயமான தீர்வை நோக்கிச் செயற்படுவதே நாடு அவருக்குச் செலுத்தக் கூடிய அதி உயர்ந்த அஞ்சலியாகும். அதற்கான நேரமும் இதுவே.- என்றுள்ளது.

# மருதானை பொலிஸில் தயாசிறி முறைப்பாடு!



நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை அளித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு கொழும்பு - டார்லி வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்துக்கு நேற்று முன்தினம் தயாசிறி ஜயசேகர சென்றிருந்தார்.

எனினும், அவரை அங்கு நுழையவிடாமல் தடுக்கும் வகையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தரப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தைப் பூட்டியிருந்தமையுடன், அவருக்கு இடையூறும் விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேற்படி முறைப்பாடை அளித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள் திருடிய சாவகச்சேரி இளைஞர் கைது

மோட்டார் சைக்கிள் திருடிச்சென்ற வழக்கில் சாவகச்சேரியில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போனதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரேமதிலக தலைமையிலான பொலிஸார் 24 வயதான சந்தேகநபரை சாவகச்சேரி பகுதியில் வைத்துக் கைது செய்தனர்.



சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் ஒரு கிராம் 30 மில்லிகிராம் அளவான ஹெரோயினும் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வருகை தந்தபோது "வெளியே நின்ற மோட்டார் சைக்கிளைப் பார்க்க ஆசையாக இருந்தது. அதனால் அதனைத் திருடிச் சென்றேன்" என சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# சாமிமலையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 5 பெண் தொழிலாளர்கள்

## மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்ப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

சாமிமலை பகுதியில் உள்ள ஸ்ரஸ்பி தோட்ட எனண்டல் பிரிவில் நேற்று மதியம் 2.30 மணிக்கு தேயிலை பறித்துக் கொண்டிருந்தவர்களை தேயிலைச் செடியின் வேர்ப் பகுதியில் இருந்த குளவிக் கூடு களைந்து கொட்டியதில் ஐந்து பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தோட்ட பஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு, அங்கு அனுமதிக் கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கான எஸ்.அம்பிகாவதி (வயது 37), டபிள்யூ.பி.ஏ.நந்தாவதி (வயது 68), பி.பர மேஸ்வரி (வயது 51), எஸ்.வி.மல்லிகா (வயது 38), எல்.சிவஜோதி (வயது 48) ஆகியோரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்னேற்றத்தை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டமும் கடையடைப்பும்

## நாளை நடத்துவதற்கு அழைப்பு

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றத்தை வலியுறுத்தியும், வைத்தியப் பணிகளை உடன் வழமைக்குத் திரும்ப வலியுறுத்தியும்

கண்டன ஆர்ப்பாட்டத்துக்கும் கடையடைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக காலை 8 மணியளவில் கூடிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

போராட்டம் தொடர்பான துண்டுப் பிரசுரம் தென்மராட்சி பகுதிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்காகச் செயற்பட முனையும் புதிய வைத்திய அத்தியட்சகருக்கு ஏதிராக முன்னெடுக்கப்படும் சதிகளை உடைத்தெறியவும் வைத்தியசாலையின் பணிகளை உடன் வழமைக்குத் திரும்பச் செய்ய வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கும் கடையடைப்புக்கும் சாவகச்சேரி பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைபதில் வைத்திய அத்தியட்சகர் ராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மூன்றாவது நாளாகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை அவதானமாக இருக்குமாறு அறிவிப்பு

இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் ஹெஸ்புல்லாஹ் தரப்பினரின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் நிலையில், அவதானமாக இருக்குமாறு அங்குள்ள இலங்கையர்களுக்கு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

ஹெஸ்புல்லாஹ் அமைப்பினர் நாளாந்தம் முன்னெடுத்துவரும் வான் வழித் தாக்குதல்களால் இஸ்ரேலின் வட பகுதியிலிருந்த சுமார் 60 ஆயிரம் இஸ்ரேலியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், அங்குப் பணியாற்றிவரும் இலங்கையர்கள் தங்களது பாதுகாப்பு தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

அதன்படி அத்தியாவசிய விடயங்களைத் தவிர்த்து அநாவசியமாகத் தங்களது பணியிடத்தை விட்டு வெளியேற வேண்டாமென இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

# அரபிக் கடலைச் சுற்றி இருக்கின்ற கடற்பரப்பிற்கு செல்ல வேண்டாம்!

## கடற்றொழிலாளர்களுக்கு அறிவுறுத்தல்

கடற்றொழிலாளர்கள் மறு அறிவித் தல் வரை வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடலைச் சுற்றியுள்ள கடற்பரப்பிற்குச் செல்ல வேண்டாமென வளி மண்டலவியல் திணைக்களம் அறிவு றுத்தியுள்ளது.

இந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாகக் கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வவுனியா சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்கள் அநுராதபுரம், மிஹிந்தலைக்கு நட்புறவு விஜயம்

(கே.வசந்தன்)

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்கள் அநுராத புரம் மற்றும் மிகிந்தலை ஆகிய பகுதிக ளுக்கு நட்புறவு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி யின் வழிகாட்டலில் பிரஜா பொலிஸ் பொறுப்பதிகாரி பிறேமரட்ணவின் தலை மையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட 17 கிராம அலு வலர் பிரிவுகளில் இருந்து சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்கள் இதன் போது சென்றிருந்தனர்.

இவ்வாறு அழைத்து செல்லப் பட்டவர்கள் மிஹிந்தலை ராஜமகாவிகா ரைக்குச் சென்று வழிபாடுகளை மேற் கொண்டமையுடன், பௌத்த பிக்குளின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டனர். அதன் பின் அநுராதபுரம் கதிரேசன் ஆலயம், அநுராதபுரம் புனித பூமி, லங்காராமய விகாரை, சிறி மகாபோதி, திரப்பனை ஆகிய பகுதிகளுக்கு சென்றி ருந்தமையுடன் சகோதர சிங்கள மொழி மக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

திரப்பனையில் வவுனியாவில் இருந்து சென்ற சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்களுக்கும், அநுராதபுரம் சமுதாய பொலிஸ் குழுத் தலைவர்க ளுக்கும் இடையில் கலந்துரையாடல், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த செயற்திட்டமானது, சமுதாய பொலிஸ் ஊடாக நட்புறவை ஏற்படுத்தி, இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை யும், புரிந்துணர்வையும் உருவாக்கும் முகமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.











# இலங்கை கடற்பரப்பில் அடுத்த ஆண்டில் இருந்து சர்வதேச ஆய்வுக் கப்பல்களுக்கு தடைவிதிக்காது

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தகவல்

இலங்கை கடற்பரப்பில் அடுத்த ஆண்டில் இருந்து சர்வதேச ஆய்வுக் கப்பல்களுக்கு தடைவிதிக்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சீன ஆய்வுக் கப்பல் நாட்டின் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதனிடையே, சோனார் தொழிநுட்பத்துடனான கப்பலொன்றை இலங்கைக்கு வழங்கியமை தொடர்பில் வெளியுறவு அமைச்சர் ஜப்பான் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.





# கலட்டுவாவ பகுதியில் அதிகூடிய மழைவீழ்ச்சி

நேற்று காலை 08.30 உடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் கலட்டுவாவ பகுதியில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அந்தப் பகுதியில் 150 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் எதிர்வரும் நாள்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு மலைச்சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, மத்துகம, புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம, எஹெலியகொட, எலபாத்த, கிரிஎல்ல, குருவிட்ட, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும், கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடை மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# ‘சம்பந்தன் ஐயா’ எனும் தமிழ்த் தேசிய அரசியல் அடையாளம்!

முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்தி வந்த பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவு, ஈழத்தமிழர் அரசியலில் தலைமைத்துவ வெளியை அதிகமாக்கியிருக்கின்றது. தந்தை செல்வாவின் இன விடுதலை அரசியலினால் ஈர்க்கப்பட்டு தமிழரசுக் கட்சியூடாக அரசியல் களம் கண்ட சம்பந்தன், தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அங்கீகாரத்தோடு நிலைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரே தலைவராகவும் செயற்பட்டிருக்கிறார். இறுதி வரை அஹிம்சை அரசியலில் நம்பிக்கை கொண்டிருந்த அவர், ஜனநாயக அரசியலில் பங்கெடுக்கும் ஒருவர் எந்தத் தருணத்திலும் யாரும் அணுகக் கூடியவராக இருக்க வேண்டும் என்பதை செல்நெறியாக கொண்டிருந்தார். அதற்காக உரையாடலுக்கான வெளியை நட்பு சக்திகளுக்கு மாத்திரமல்லாமல், எதிரிகளுக்கும் தனக்கும் தமிழினத்துக்கும் துரோகம் இழைக்கிறார்கள் என்று அவர் கருதியவர்களுக்காகவும் திறந்து வைத்திருந்தவர். அவர், எந்தத் தருணத்திலும் துருவ நிலை அரசியலை பின்பற்றியவர் அல்லர். அதனால்தான், இலங்கை வரலாற்றில் தென் இலங்கை எதிர்கொண்ட நெகிழ்வுத்தன்மை கொண்ட தமிழ்த் தலைவர்களில் ஒருவராகவும் பார்க்கப்படுகின்றார்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுத போராட்டம் அதியுச்ச வெற்றிகளைப் பெற்ற 2000ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில், தேர்தல் அரசியல் ஊடாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கின்ற தரப்பு பலம்பெற வேண்டும் என்ற எண்ணப்பாடு கிழக்கில் இருந்து எழுந்தது. வன்னியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கிய ஆசியோடு மறைந்த தராகி சிவராம் உள்ளிட்டவர்களின் தொடர் உரையாடல்களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் சாத்தியப்பட்டது. ஈழத் தமிழர்களின் தலைமையாக புலிகள் மாறிய பின்னரான காலத்தில், அதுவரை தமிழர் அரசியலை வழிநடத்தி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களினால் தீண்டப்படாத தரப்பாக மாறியிருந்தது. கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் படுகொலையோடு, தமிழர் அரசியல் களம் புலிகளைச் சுற்றி சுழல ஆரம்பித்தது. மிலேனியம் பிறக்கும் வரையில் விடுதலைப் புலிகள், அரசோடு சேர்ந்து இயங்கிய ஆயுத இயக்கங்களை மாத்திரமல்ல, கூட்டணியின் தலைவர்களையும் துரோகிகளாகவே கருதியிருந்தார்கள். ஆனால், அரசியல் இராஜதந்திர களத்தில், ஆயுதப் போராட்ட வெற்றிகள் மாத்திரம் இனவிடுதலையைப் பெற்றுத் தராது என்பதை புலிகள், உணரத் தொடங்கியதன் விளை வாகவே கூட்டமைப்பு உருவாக்கத்திற்கு அங்கீகாரம் அளித்தார்கள். அது வரை காலமும் துரோகிகளாக கருதிய தரப்பினரை, ஒரே அணிக்குள் இணைத்து, அவர்களை தங்களின் ஆசிபெற்ற தரப்பினராக புலிகள் அறிவித்தனர். அதனால், கூட்டமைப்புக்குள் அணி சேர்ந்த கட்சிகளும் இயக்கங்களும் அவர்களின் கடந்த கால கறுப்புப் பக்கங்களின் மீது பாவ மன்னிப்பு நீர் தெளிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டார்கள். அத்தோடு, அவர்களையெல்லாம் ஒவ்வொரு ஈழத்தமிழனின் வீட்டுக்குள்ளும் கொண்டு சென்று தேர்தல் அரசியலில் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தார்கள். அதுவும், 2004 பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் பெற்ற வெற்றி, தமிழர் அரசியலில் மிகப்பெரியது. அந்தத் தருணத்தில்தான், கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவராக சம்பந்தன், புலிகளின் ஆசியோடு தெரிவானார். அது, அவரை அடுத்த இரண்டு தசாப்த காலத்துக்கு கூட்ட மைப்பின் தலைவராக்கியது.



புருஜோத்தமன் தங்கமயில்

அஹிம்சை அரசியல் மீது இறுதி வரை நம்பிக்கை கொண்டிருந்த சம்பந்தன், விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கான அர்ப்பணிப்பையும், அவர்கள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருந்தமையினால்தான், கூட்டமைப்பின் தலைவராக மாறும் நிலை ஏற்பட்டது. தமிழர் பிரதிநிதிகளாக தாங்கள் தேர்தல்கள் ஊடாக தேர்தெடுக்கப்பட்டாலும் அது, புலிகளின் அனுசரணையோடு நிகழ்ந்தது என்பதையும், புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் அவர் நாடாளுமன்றத்துக்குள் கூட அறிவித்திருக்கிறார். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களின் சார்பில் புலிகள் மாத்திரம் பங்களித்தால் போதுமானது என்பதையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். புலிகள்

தொடர்ச்சி▼



# ‘சம்பந்தன் ஐயா’ எனும் தமிழ்த் தேசிய அரசியல் அடையாளம்!

தொடர்ச்சி▲

தங்களின் முடிவினை முற்கூட்டியே உணர்ந்து கொண்டமையினால்தான், ஜனநாயக தேர்தல் அரசியலுக்காக தமிழ்த் தரப்புக்கள் அனைத்தையும் ஒன்றாக்கி கூட்டமைப்பை உருவாக்கினார்களோ என்ற சந்தேகம் அடிக்கடி எழுப்பப்படுவதுண்டு. அதனால்தான், முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னாலும் தமிழ் மக்கள் ஓரணியில் நின்றார்கள். முள்ளிவாய்க்கால் முடிவு என்பது தமிழ் மக்கள் வரலாறு பூராவும் சந்தித்து வந்த பின்னடைவுகளில் ஆகப்பெரியதும் ஆகப்பிந்தியதுமாகும். அதிலிருந்து மீள்வதென்பது இலகுவான காரியமாக இப்போதும் இல்லை. அப்படியான தருணத்தில், புலிகள் கையளித்த கூட்டமைப்பை கட்டுக்குலையாது காப்பதில் சம்பந்தன் கவனமாக இருந்தார். வயது மூப்பினால் முடங்கும் காலம் வரையில் அதனைக் காப்பாற்றவும் செய்தார். அத்தோடு, முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான காலம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் சூன்யமானது. அந்த வெளியை எப்படிக் கையாள்வது என்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அப்படியான சூழலில் கூட்டமைப்பு வழியாக மீண்டும் அஹிம்சை அரசியலை பலம்பெற வைக்க வேண்டும் என்பதில் சம்பந்தன் அழுத்தமாக பங்கினை வகித்தார்.

முள்ளிவாய்கால் முடிவு நிகழ்ந்து சில மாதங்களுக்குள்ளேயே ராஜபக்ஷக்கள் வெற்றி மமதையோடு நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலித்து, சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் அரசியல் துணிவுள்ள முடிவை சம்பந்தன் எடுத்தார். இந்த முடிவுக்காக கால காலத்துக்கும் தான் விமர்சிக்கப்படுவேன் என்பது அவருக்குத் தெரியும். ஏனெனில், ராஜபக்ஷக்களின் ஏவலாளராக நின்று இறுதி யுத்தத்தை வழிநடத்தியவர் தளபதி பொன்சேகா. அப்படிப்பட்ட நிலையில், ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதற்கான அணுகுமுறையின் போக்கில் சம்பந்தன் அந்த முடிவை எடுத்தார். பின்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தனின் கையில் சிங்கக் கொடியைத் திணிக்க, அவர் ஏந்தியமை அவரின் அரசியல் வாழ்வின் பெரும் விமர்சனமாக தொடர்கின்றது. ராஜபக்ஷக்களை தோற்கடித்தல் என்பது அரசியல் – இராஜதந்திர ரீதியில் வெற்றியளிக்கும் என்பது மாத்திரமல்ல, அது தமிழ் மக்களின் கூட்டுணர்வின் வெளிப்பாடாகும் என்பதையும் சம்பந்தன் நம்பினார். அந்த நம்பிக்கையில் இருந்து அவர் ஒருபோதும் மாறவில்லை. அதனால்தான், ராஜபக்ஷக்களை 2015ஆம் ஆண்டு தோற்கடிக்க முடிந்தது.

பௌத்த – சிங்கள மேலாதிக்க வரலாற்றில் முள்ளிவாய்க்கால் வெற்றி என்பது மிகப்பெரியது. ஆனால், அந்த வெற்றியைத் தேடித் தந்தவர்களை ஆறு ஆண்டுகளுக்குள்ளேயே தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொள்தல் என்பது யாரும் எதிர்பார்க்காதது. அது, ஒரே ஜனாதிபதித் தேர்தலில் நிகழ்ந்தது அல்ல. அது, 2010இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஓரணியில் நிற்கிறார்கள் என்பதை கூட்டமைப்பு சர்வதேசத்துக்கும் தென் இலங்கைக்கும் உணர்த்தியதன் விளைவாக நிகழ்ந்தது. அதுபோல, ராஜபக்ஷக்களுக்கு எதிராக ரணிலை முன்னிறுத்தினால், ராஜபக்ஷக்கள் இலகுவாக வெற்றிபெறுவார்கள் என்பதை தென் இலங்கைக்கும் இராஜதந்திர தரப்புக்களுக்கும் உணர்த்தியதில் சம்பந்தனின் பங்கு கணிசமானது. அதனால்தான், இறுதி வரையில் ராஜபக்ஷக்களோடு அமர்ந்து அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்த மைத்திரிகால சிறிசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரானார். அந்த வெற்றியில் தமிழ் மக்களின் வாக்குகள் செலுத்திய பங்கு அளப்பரியது. சம்பந்தனைப் பொறுத்தளவில் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தல், அதனை வழிநடத்தும் அரசியல் தலைமையின் பொறுப்பு என்பதை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்தவர். அதனால்தான், சில தரப்புக்கள் தேர்தல் புறக்கணிப்பு மற்றும் பொது வேட்பாளர் வெற்றுக் கோசத்தை எழுப்பிய போதெல்லாம் அதற்கு எதிராக நின்றிருக்கிறார். எந்தவித ஆக்கபூர்வமான ஏற்பாடுகளுக்கும் உதவாத எந்த அரசியல் நகர்வும் அபத்தமானது என்பதை அவர் நம்பினார். அவர் மறைவதற்கு சில நாள்களுக்கு முன்னர், ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலும், தற்போது தமிழ்த் தேசிய அரசியலில் அரசியல் பத்தியாளர்களினால் முன்னெடுக்கப்படும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை நாசகாரமான செயல் என்று விமர்சித்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலில் தலைமையாக சுமார் இரண்டு தசாப்த காலம் செயற்பட்ட சம்பந்தன், தன்னை இலங்கையின் மகனாக கருதுவதில் இருந்து பின்நிற்கவில்லை. “...நான் இலங்கையன், ஆனால் பெருமைக்குரிய தமிழன். அதற்குரிய அடையாளம், அதிகாரத்தினை பெறுவதற்கு தகுதிக்குரியவன்...” என்பதுதான், அவரின் அரசியல் நிலைப்பாடாக இருந்தது. அத்தோடு, இலங்கையில் இன முரண்பாடுகளுக்கான தீர்வு என்பது, நாட்டின் அனைத்துத் தரப்புக்களும் இணக்கத்தோடு காணப்பட வேண்டியது என்பதையும் செல்நெறி

தொடர்ச்சி▼



தொடர்ச்சி▲

யாக கொண்டவர். அதனாலேயே, அவர் அதிகம் விமர்சிக்கப்பட்டார். நல்லாட்சிக் காலத்தில், எப்படியாவது அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்பதில் அவர் தன்னுடைய அதிகார – அற எல்லையைத் தாண்டி விட்டுக்கொடுப்புக் களைச் செய்து செயற்பட்டிருக்கிறார். புதிய அரசமைப்பு ஒன்றை வரைவதற்காக அவர், பௌத்தத்துக்கு முத லிடம், ஏக்கிய ராச்சிய –ஒருங்கிணைந்த நாடு குழப்ப முள்ள விடயங்களுக்கு எல்லாமும் உடன்பட்டு தன்னு டைய அரசியல் வரலாற்றில் மறுதலிக்க முடியாத விமர்சனங்களை எதிர்கொண்டார்.

ஓர் இனத்தை வழிநடத்தும் தலைவனுக்குரிய தகுதி என்பது களத்தில் எதிரிகளோடு பொருதுவது மாத்திரமல்ல, சமய சந்தர்ப்பங்களைப் பார்த்து இலக்குகளை அடைவதற்குரிய நகர்வுகளை மேற்கொள்வதுமாகும். அதில், பின்னடைவுகள் ஏற்படலாம். காலத்துக்கும் விமர்சிக்கப்படலாம். ஆனால், இலக்கை அடைவதற்கான துணிவுள்ள முடிவுகளை எடுத்தாக வேண்டும். சம்பந்தன் அந்த நிலைப்பாட்டைப் பின்பற்றிய ஒருவர். தென் இலங்கையுடனான தன்னுடைய அணுகுமுறை சார்ந்து தான் காலத்துக்கும் விமர்சிக்கப்படலாம், சிலர் தன்னை துரோகி என்றுகூட விளிக்கலாம் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அவற்றுக்கு பயந்து முடிவுகளை எடுக்காது ஒதுங்குதல் என்பது தலைவனுக்குரிய பண்பல்ல என்பதை அவர் நம்பினார். அதனால்தான், அவர் கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளுக்குமான பொறுப்பினை ஏற்றார். அதுபோல, தன்னுடைய காலத்துக்குள் தமிழ் மக்களுக் கான தீர்வைக் காண்பதில் அவர் அளவற்ற அவா கொண்டிருந்தார். அதில், தன்னால் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது என்ற பெயரைப் பெற வேண்டும் என்ற பேரவாவும் அடங்கியிருந்தது. ஆனால், அதற் கான சூழலை தென் இலங்கையின் பேரினவாத சக்திகள் அனுமதிக்கவில்லை. மீண்டும் ராஜபக்ஷ க்களை ஆட்சியில் அமர்த்தி, அவரின் ஆசையில் மண்ணை அள்ளிப்போட்டன.

சம்பந்தனின் மறைவுக்குப் பிறகு, அவர் மீது தென் இலங்கையினால் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருந்து எழுந்து வந்த மிதவாதத் தலைவர் என்ற பெயர் சூட்டப்படுகின்றது. அஞ்சலிக் குறிப்புக்கள் எழுதப் படுகின்றன. ஆனால், அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நேரடி அரசியலில் இருந்து மறைந்திருக்கின்ற தலைவரான சம்பந்தனின் இன முரண்பாடுகளைக களைவதற்கான அர்ப்பணிப்பை, தென் இலங்கையின் தலைவர்கள் யாரும் அவர் இருக்கும் காலத்தில் அங்கீகரித்ததில்லை. அதற்காக செயற்பட்டதுமில்லை. எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருந்த காலத்தில், அவர் கலந்து கொண்ட சுதந்திர தின நிகழ்வின் இறுதியில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது, அவரின் கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர், பேரினவாத ஆக்கிரமிப்பு அரசியல் தமிழ் மக்கள் மீது எவ்வாறான அடக்குமுறையைச் செய்திருக்கின்றது என்பதை உணர்த்தப் போதுமானது. இரு மொழிகளைக் கொண்டிருக்கின்ற நாட்டில், ஒற்றை மொழி ஆதிக்கத்தை விதைத்து, தமிழ் பேசும் மக்களை அலைக்கழித்த அரசியலில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது என்பது சம்பந்தனின் வாழ்நாளில் முக்கிய நிகழ்வாக இருந்திருக்கலாம்.

இந்தப் பத்தி வெளியாகும் இன்றைய நாளில், 'ஐயா' என்று அனைவரினாலும் அழைக்கப்பட்ட தமிழர் விடுதலை மீது தீராப்பற்றுக் கொண்டிருந்த மூத்த மகன் ஒருவர், தமிழர் தலைநகரில் தீயுடன் சங்கமமாகப் போகிறார். அந்தத் தீ அவரின் உயிரற்ற உடலை தின்று தீர்க்கட்டும். ஆனால் அவரும் ஆயிரமாயிரம் ஆன்மாக்க ளும் ஏந்தியிருந்த விடுதலைத் தீயை அணையாது காத்திருக்கட்டும். சென்று வாருங்கள் ஐயா!

# கட்டளையை மீறி பயணித்த லொறி மீது துப்பாக்கிச்சூடு

மஹஓய, டேம்பிட்டிய பிரதேசத்தில் கட்டளையை மீறி பயணித்த லொறியொன்றின் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் நடத்தியுள்ளனர்.

அனுமதி பத்திரின்றி மரக்குற்றிகளை கொண்டு சென்ற லொறியொன்றின் மீதே இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் தப்பிச் சென்றுள்ளனர்.

மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன் பொலிஸ ார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# தந்திர வியூகம் தற்காக்காது!

உலகிலேயே சுமார் முப்பது ஆண்டுகளாக முப்பதுக்கும் மேற்பட்ட தேர்தல்களில் கட்சி தோல்வி அடைந்தும் தொடர்ந்து தலைவராக இருக்கும் ஒரே அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்கதான். வேறு உதாரணமாக எங்கும் இல்லை. அதுவும் ஒரே ஆசனத்தால் பின் கதவால் நாடாளுமன்றம் சென்று, அதே பின் கதவால் பிரதமராகி, ஜனாதிபதியாகி, உலக சரித்திரத்தில் வரலாறாகிவிட்ட அரசியல் பெருமை ரணிலையே சாரும்.

சூழ்ச்சியும், தந்திரமும், அரசியல் மதிநுட்பமும் கருதி வியூகங்கள் வகுப்பது அரசியலில் இயல்பானதே. அதில் பல நலன் சார்ந்த நெறிமுறைகளும் திரைமறைவு கபடத்தனங்களும் சுயநலமும் சந்தர்ப்பவாதங்களும் பிற்போக்குத்தனங்களும் கசடுத்தனமும் கபோதித்தனமும் உள்ளடங்கும். இதனைத்தான் அரசியல் தந்திரோபாயம் என்று நாகரிகமாகக் குறிப்பிட்டுக் கடந்து செல்கிறார்கள். உள்ளதை உள்ளபடி பேசாமல் இருப்பதும், சகலவற்றையும் சகித்துக் கொள்வதும், போலித்தனமாக புன்னகைப்பதும், அர்த்தம் புரியாமல் உரையாடுவதும்தான் ராஜதந்திர அணுகுமுறை என்கிறார்கள்.

மேற்கூறியவை எல்லாம் ரணிலுடன் கூடப் பிறந்தவை. புலிகள் இயக்கம் மற்றும் இலங்கையில் உள்ள சகல அரசியல் கட்சிகள் இடையேயும் பிளவுகளை ஏற்படுத்திய அரசியல் நரித்தந்திரசாலி இவர். இவருடைய மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை 'ஆசியாவின் நரி' என அக்காலத்தில் விழிப்பதுண்டு. அவரின் வளர்ப்பு அல்லவா?

நாற்பத்தேழு வருட அரசியல் வாழ்வில் ஒரு முறை கூட ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சியை அனுபவிக்காதவர். அதிர்ஷ்டம் இல்லாதவர். அரசியல் அவதந்திரத்தினால் அவருக்கு எப்போதும் நெருக்கடியே ஏற்பட்டது. அறம் தற்காத்துக் கொள்வதில்லை. புலமைசார் அறிவும் தந்திரமும்தான் இதுவரை தன்னைக்காத்து வந்துள்ளன. அரசியல் தந்திரங்களுக்கு அப்பால் அறத்தையும் பின்பற்ற வேண்டும். அதனால் தான் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், ஊழ்வினை உறுத்தி வந்தூட்டும்' என்கிறது சிலப்பதிகாரம்.



வி.எஸ்.சிவகரன்

இவை எல்லாம் தனது சதித்திட்டங்களினால் வீழ்த்தி விடலாம் எனும் அசட்டு நம்பிக்கைகளை தந்து கொண்டிருந்தாலும், நிறை நிலை அறிவிருந்தும் நின்று, நிதானித்து, காலத்துக்குத் தகுந்தாற்போல் தீர்மானம் எடுப்பதில் வல்லவரென்று எண்ணிச் செயற்படுபவர். அதனால்தான் தனது தந்திரத்தை நம்புவதால் தன்னையும் தன் சூழலையும் தனக்கேற்றவாறு மதிப்பட முடியாதவர்.

அவரது சூதுமதி சிந்தனை அவரையே சூழ்ந்து கொள்கிறது. எல்லோருக்கும் நல்லவராக வழி காட்ட முயற்சித்தால் முடிவில் எவருக்கும் நண்பராக இருக்க முடியாது என்பது யதார்த்தம். நடைமுறை வாழ்விலும் இப்படியான மனிதர்கள் உண்டு. இவர் எந்தப் பக்கம் நிற்கிறார், எவ்விதமான கொள்கைக் கோட்பாட்டோடு இருக்கிறார் என்கின்ற எந்த அடையாளமும் இல்லாதவர்களாக, சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் தமது நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக எந்த எல்லையையும் தொடுவார்கள். இவர்களைப் பச்சோந்தியை விட மோசமானவர்கள் என விமர்சிப்பதுண்டு.

ஆகவே தற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதா அல்லது தன்னால் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தைக் கேள்விக்கு உட்படுத்தி மேலும் ஒரு

தொடர்ச்சி▼



# தந்திர வியூகம் தற்காக்காது!

தொடர்ச்சி▲

வருடம் பதவியில் தொடர்வதா என களஅரசியல் வாக்காளர்களின் மனோ நிலையை புரிந்து கொள்ளாத ஒரு முதிர்ச்சியற்ற அரசியல்வாதி போல் நிதானித்துத் தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடுகிறார்.

அரசியல் கூட்டைக் கட்டமைப்பதிலும் குழப்பகரமான நிலையில் உள்ளார். தனக்கு அதிகாரத்தை தந்த பொதுஜன பெரமுனவை சேர்த்துக் கொள்வதா, அவ்வாறு சேர்த்தால் படித்த சிங்களவர்கள் தனக்கு எதிராக மாறி விடுவார்களோ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு நிலைப்பாடு எப்படி இருக்குமோ, சிங்கள முற்போக்கு சக்திகள் எவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்வார்களோ, வடக்குக் கிழக்கிலே தமிழ்த் தேசிய வாக்குகளை எப்படி பெறுவது, முஸ்லிம்களின் வாக்குகளை எப்படி கவர்ந்து கொள்வது, இதிலும் தமிழ் தேசியத்துக்கு எதிரான கட்சிகளை – ராஜபக்ஷவின் கூட்டாளிகளாக இருந்தவர்களை – கூட வைத்திருப்பதால் அதை வடக்கு,கிழக்கில் எப்படி சமாளிப்பது, தன்னை ஆதரிக்கக் கூடிய நிலையில் உள்ள ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளை எப்படி உள்ளீர்த்துக் கொள்வது, தமிழரசு கட்சியில் இருக்கும் தனது இருட்டு விட்டு நண்பர்களை எப்படி தற்காத்துக் கொள்வது, தன்னை அகற்ற வேண்டும் எனும் நோக்கில் செயல்படும் அயல் நாட்டை எப்படி சமாளிப்பது, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி போன்ற அரசியல் எதிரிகளை எப்படி எதிர்கொள்வது, தொழிற்சங்க போராட்டங்களை எப்படி எதிர்கொண்டு கட்டுப்படுத்துவது, பொரு ளாதாரத்தில் இருந்து நாடு மீண்டு விட்டது என்கின்ற பரப்புரையை எப்படி வாக்காளர் மத்தியிலே கொண்டு சேர்ப்பது, விலையேற்றத்தினை எப்படிக் குறைப்பது, எதிரணியில் ஆதரவு நிலையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை எப்படி பிரித்து எடுப்பது, இதில் எவரை, எப்படித் தனித்தனியாகக் கையாள்வது, யாரை நம்புவது, யாரை நீக்குவது, எவ்விதமான கட்சிகளோடு கூட்டு வைத்தால் தேர்தலில் வெல்லலாம் எனும் இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில் எப்படி யாவரையும் பகைக்காமல் நகர்த்துவது என்பதே மிகப்பெரிய ஆச்சரியமான எதிர்பார்ப்புத்தான். முறையாகக் கையாளாவிட்டால் பின்னடைவுதான் ஏற்படும். அதை புரிந்து கொள்பவராகத் தெரியவில்லை.

மக்களை நம்பாமல் தந்திரத்தை மட்டும் நம்புவதன் வினை எப்போதும் தனக்கு எதிராகவே மாறுவது உண்டு என்பதனை இத்தனை ஆண்டுகால அரசியல் அனுபவ தோல்விகளுக்கு பின்னும் கற்றுக் கொள்ளாத ஒரே அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்கதான்.

இதில் ஒப்பீட்டளவில் குறைந்தபட்ச இனவாதியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் இவர், வடக்கு – கிழக்கு மக்களின் வாக்கைஒ பெறுவதற்கு இவ்விதமான தந்திரத்தை எப்பொழுதும் வெளிக்காட்டுவதுண்டு. இனப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என அவ்வப்போது கூறிக் கொண்டாலும் தனக்கு ஜனாதிபதி என்னும் முதல் நிலை அதிகாரம் கிடைத்தும் எந்த ஒரு துரும்பைக் கூட இதுவரை தூக்கிப் போடவில்லை. சில கலந்துரையாடல்களை மாத்திரம் வைத்து இதோ இத்தனை நாளில் தீர்வு தருகிறேன், அத்தனை நாளில் தீர்வு தருகிறேன் எனக் குடுகுடுப்பைக்காரன் போல் அர்த்தமற்ற வாக்குறுதிகளை வழங்கினார். வடக்கைத் தனியாகவும், கிழக்கைத் தனியாகவும், முஸ்லிம்களை தனியாகவும், மலையக கட்சிகளை தனியாகவும் கையாள முனைகிறார். ஒரு காலத்திக் சுய நிர்ணய அதிகாரப்பகிர்வை சர்வதேச மட்ட பங்குபற்றலுக்கு மத்தியில் ஏற்றுக் கொண்ட இவர், தற்போது 13ஆம் திருத்தத்தையே கேள்விக்கு உட்படுத்தும் நிலையிலே இருக்கின்றார்.

இன்னும் ஒரு மாதத்திற்குள் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவரக்கூடிய ஏது நிலை காணப்படுகிறது. இக்காலப் பகுதிக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என தற்போதுதான் இலங்கை அரசியலுக்கு புதிதாக வந்தவர் போல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை அழைத்து பேசுகிறார். இது உலக மகா நடிப்பு. உச்சபட்சக் கபடத்தனம். ஏமாற்றி வாக்குப் பெறுவதற்கான தந்திரோபாயம். தமிழ் மக்களும், சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் இந்தத் தந்திரங்களையும் ஏமாற்றுதல்களையும் கடந்த கால செயல்பாடுகளின்

தொடர்ச்சி▼



# தந்திர வியூகம் தற்காக்காது!

தொடர்ச்சி▼

ஊடாக நன்கு புரிந்து வைத்துள்ளனர். சில அரசியல்வாதிகள் மட்டும் இதைப் புரிந்து கொண்டும் தங்கள் நலன்களுக்காக அவ்வப்போது இத்திட்டங்களில் இணைந்து கொள்கிறார்கள். மக்களினுடைய மனோநிலையையும் அவர்களுடைய மனங்களை வெல்லக்கூடிய அரசியல் நெறிமுறைகளையும் இதுவரை புரிந்து கொள்ளாமல், தொடர் தோல்வி நாயகனாக இலங்கையிலே மிளிரக் கூடிய ஒருவராக ரணில் இருக்கிறார். அது எதிர்காலத்திலும் நிகழ்வதற்குரிய வாய்ப்புகளே அதிகம்.

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'என்கிறான் வள்ளுவன். வஞ்சகமும் சூதும் எம்மை துரத்தி துரத்தித் தாக்கும். அது அரசியலுக்கும் சரி, வாழ்வியலுக்கும் சரி ஒன்றாகத்தான் இருக்கும்.

இவருடைய இந்தப் பிந்திய சமரச நகர்வு என்கின்ற ஏமாற்று நாடகத்தை சுமந்திரனும் நம்புபவர் போல் தான் தெரிகிறது. எழுபது ஆண்டு பிரச்சினையை நள்ளிரவில் தீர்த்து விட முடியுமா? அப்படித் தீர்ப்பதற்கு சிங்களவர்கள் அனுமதிப்பார்களா? குறைந்தது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய சூழலுக்கு கூட விடுவார்களா? இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தேர்தலை வைத்துக்கொண்டு முனைந்தால் தெற்கில் உள்ள சிங்கள கடும் கோட்பாட்டு வாக்குகள் எதிராக மாறக்கூடிய கூடிய நிலையைப் புரிந்து கொள்ளாதவரா ரணில்?

ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு முதல் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மாற்றமோ, முன்னேற்றமோ, ஏற்றமோ இருக்கப் போவதில்லை. வெறுமனே அரசியலுக்காகத்தான் இதனைப் பேசிக் கொள்ளலாமே தவிர, நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை. ஏனெனில் தெற்கைப் பகைத்துக் கொண்டு – தெற்கின் வாக்கை புறமொதுக்கிக்கொண்டு – வடக்கு, கிழக்கு வாக்கை மாத்திரம் நம்பி எந்த அரசியல்வாதியும் வெற்றி பெறக்கூடிய கள நிலைவரம் இல்லை. ஆகவே சிங்கள மக்களைப் பகைத்துக் கொண்டு தேர்தல் நேரத்தில் தீர்வு என்கின்ற ஒரு நாடகத்தை ஆட முனைவதும் வேடிக்கையாகவே இருக்கிறது.

உளத்தூய்மையோடு எந்தச் சிங்களத் தலைமையும் இதுவரை தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை முன்னெடுக்கவும் இல்லை, முன்னெடுப்பதற்குரிய முனைப்புகளைக் காட்டவும் இல்லை. காலத்தைக் கடத்தி, குழப்பகரமான அரசியல் சூழலை உருவாக்கி, அதில் சிங்களக் கடுந் தேசியக் கோட்பாட்டில் குளிர் காய்ந்து, தேர்தலில் எப்படி வெல்லலாம் என்கின்ற நிலைப்பாட்டையே அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வருகிறார்கள். எதிர்காலத்திலும் இதையே அவர்கள் வெளிக்காட்டுவார்கள். காலத்துக்குக் காலம் தமிழ் தலைவர்கள் ஏமாந்ததும், சிங்களத் தலைமைகளிடம் தோற்றுப் போனதுமே வரலாறாக இருக்கிறது.

தந்திரங்களின் ஊடாகவோ, புத்தியைப் பயன் படுத்தியோ தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சி னைக்கான தீர்வு விடயத்தில் எந்த விதமான முன்னேற் றத்தையும் அரசியல்வாதிகளால் நகர்த்த முடியவில்லை. ரணில் போன்ற அதி தந்தரசாலிகளுக்கு முன்னால் இவர்களுடைய செயல்பாடும் இவர்களின் முன்னெடுப் புகளும் எந்தப் பயனையும் தரக்கூடியதாக இருக்கப் போவதில்லை.

இவருடைய ஏமாற்றும் தந்திரமும் முழுக்க முழுக்க வாக்கை இலக்கு வைத்து கூறும் வார்த்தைகளாகவே இருக்கின்றன. இதனை தமிழர்களும் தெற்கில் சிங்களவர்களும் புரிந்து கொள்வார்கள் என்பதில் எவருக்கும் இரு கருத்து நிலை இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

மீண்டும் அவர் அதிர்ஷ்டம் அற்றவர் ஆகப்போ கிறாரா? அல்லது உளத்தூய்மையோடு செயலாற்றப் போகிறாரா?









# மக்கள் வங்கி 63 ஆவது ஆண்டு நிறைவை சர்வமத நிகழ்வுகளுடன் கொண்டாடியுள்ளது

மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டு, 63 ஆண்டுகள் நிறைவை அது ஜுலை 01 ஆம் திகதியன்று பூர்த்தி செய்திருந்தது. இதையொட்டி, மக்கள் வங்கியின் பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சங்கங்கள் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் சர்வமத நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன.

அந்த வகையில் ஜுலை 01 ஆம் திகதியன்று மக்கள் வங்கியின் பௌத்த சங்கத்தால் பிரித் பாராயண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சங்கங்களும் தத்தமது சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன.





மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச, பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நாடு, மக்கள், வாடிக்கையாளர்கள், மக்கள் வங்கியினை ஸ்தாபித்து முன்னோர்கள், கடந்தகால மற்றும் நிகழ்கால ஊழியர்கள் என அனைத்து தரப்பினருக்கும் ஆசிகளை வேண்டும் வகையில் சமய நிகழ்வுகள் அமைந்தன.




## டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, எயார்டெல் லங்காவை கையகப்படுத்தியது:

# ஒன்றிணைப்பு செயன்முறை ஆரம்பம்

தேவையான அனைத்து ஒழுங்குமுறை மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதல்களை தொடர்ந்து, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. (Dialog), ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட் (Axiata) மற்றும் பார்த்தி எயார்டெல் லிமிடட் (Bharti Airtel) ('தரப்பினர்' அனைவரும் ஒன்றாக), ஆகியன பங்கு விற்பனை பரிவர்த்தனை வெற்றிகரமாக பூர்த்தியானது.

இந்த பங்கு பரிமாற்றத்தின் மூலம் டயலொக் நிறுவனம், பார்த்தி எயார்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடட்டின் (Airtel Lanka) வெளியிடப்பட்ட 100 வீத பங்குகளை கையகப்படுத்துகிறது.

இந்த பங்கு பரிமாற்றத்தின் பின்னர், டயலொக்கின் 73.75 வீத பங்குகளை ஆசிஆட்டாவும், 10.355 வீத பங்குகளை பார்த்தி எயார்டெல் நிறுவனமும் மிகுதி 15.895 வீத பங்குகளை பொது மக்களும் உரிமை கொண்டாடுவர்.

கம்பனி சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுக்கு அமைய எயார்டெல் லங்காவை தன்னுடன் ஒன்றிணைக்க டயலொக் முன்மொழிந்துள்ளது. இதன்படி, ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பாக டயலொக் திகழும்.

இந்த இணைப்பு, 2023 மே மாதத்தில் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும். இரண்டு முன்னணி நிறுவனங்களின் பலத்தையும் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைத்து, நாட்டின் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உலகத்தர டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கி, நாட்டின் டிஜிட்டல் சூழலமைப்புக்கும் பொருளாதாரத் திற்கும் பங்களிக்கவுள்ளன.

இணைப்பின் பின்னர், டயலொக் மற்றும் எயார்டெல் லங்கா ஆகியன வழமைபோலவே வாடிக்கையாளர்களுக்கு தமது சேவைகளை தொடர்ந்து அளிக்கும் அதேவேளை, அபரிமிதமான மதிப்பும் மற்றும் அதிசிறந்த இணைப்பு தீர்வுகளையும் அளிக்கும் நோக்குடன் இரு வலையமைப்புகளும் இணைந்து பணிகளை தொடங்கவுள்ளன.






# SLIIT - Huawei இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

பல்லேகலவில் உள்ள SLIIT கண்டி பல்கலைக்கழகத்தில் கூட்டு ஆய்வு முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கமான ஆய்வுகூடத்தை அமைக்கும் நோக்கில் உலகளாவிய ரீதியில் உள்ள மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான Huawei உடன் SLIIT கண்டி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது.

SLIIT இன் தலைவரும் வேந்தருமான பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக, Huawei Technologies Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. சன்ங் ஜின்சா ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில், கல்வியியல் பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக, ஆய்வு மற்றும் சர்வதேச விவகார பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் சமந்த தெலிஜ்ஜகொட, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அஜந்த கோமஸ், கணினிப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரதீப் அபேகுணவர்த்தன, SLIIT கண்டி பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடாபதிதி கலாநிதி மாதவ ஹேரத், சட்ட மற்றும் பெருநிறுவன விவகார சிரேஷ்ட முகாமையாளர் செல்வி நடாஷா ரணதுங்க மற்றும் செல்வி சொனாலி சேனாநாயக ஆகியோர் SLIIT சார்பில் கலந்துகொண்டனர்.

அதேநேரம், Huawei நிறுவனத்தின் சார்பில் EBG இன் பிரதித் தலைவர் நீ ஷாபிங், EBG இன் அரசாங்க மற்றும் பெருநிறுவனங்களுக்கான பணிப்பாளர் இசுறு ஜயசேகர, EBG இன் தீர்வுகளுக்கான பணிப்பாளர் நதுன் குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.



கண்டியில் உள்ள Huawei தகவல் தொழில்நுட்ப கல்விக்கூட புத்தாக்க ஆய்வுகூடம் ஆய்வு மற்றும் தயாரிப்புக்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்கும். கூட்டிணைந்த ஆய்வு, பயிற்சித் திட்டங்கள், சான்றிதழ்கள், உள்ளகப்பயிற்சி, தொழில்த்துறை மற்றும் துறைசார் பயிற்சி வாய்ப்புக்களை ஊடாகத் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ளகத் திறமைகளைக் கட்டியெழுப்புவது இந்தக் கூட்டாண்மையின் நோக்கமாகும்.

முதற்கட்டமாக SLIIT பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கில் SLIIT மற்றும் Huawei ஆகிய இணைந்து சான்றளிக்கப்பட்ட பயிற்சி நிலையமொன்றை அமைக்கவிருப்பதுடன், இவர்கள் வெளித்தரப்பினருக்குப் பயிற்சியளிப்பார்கள்.

இந்தக் கூட்டாண்மையின் ஊடாக SLIIT கண்டி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் Huawei இன் வசதிகளைப் பார்வையிட வாய்ப்புக் கிடைக்கும். இதற்கு மேலதிகமாக கண்டி பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் புத்தாக்க சவால்கள் மற்றும் போட்டிகள் நடத்தப்படவிருப்பதுடன், இது பாடசாலைகள் மத்தியிலும் விஸ்தரிக்கப்படவிருப்பதுடன் விருந்தினர் விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாகக் கலந்துரையாடல்கள் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக SLIIT பட்டதாரிகள் இலங்கை முழுவதிலும் உள்ள Huawei தளங்களில் உள்ளகப் பயிற்சிகள் மற்றும் கள விஜயங்களை மேற்கொண்டு பெறுமதியான தொழில்துறை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வார்கள். கல்வியியல் பீடமானது Huawei சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் நாட்டின் தகவல் தொழில்நுட்ப பணியாளர் சக்திக்குத் தேவையான திறமைகளைக் கட்டியெழுப்பும். இணைந்த ஆய்வு முயற்சிகளும் பொறுப்பேற்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ‘Unveil the Dream 2024’ நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது இலங்கை வங்கி

நாட்டின் பொருளாதார வளாச்சியையும் புத்தாக்கத்தையும் வலுவூட்டும் நோக்கில் இலங்கை வங்கியானது 'Unveil the Dream 2024' எனும் இளந் தலைமுறை தொழில்முனைவோருக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதுமுள்ள இளம் தொழில்முனைவோருக்கு அவர்களின் கனவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் உதவிகளை வழங்கி அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறியளவிலான வியாபார அபிவிருத்திப் பிரிவு, தேசிய வியாபார அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம் இளம் தொழில்முனைவோருக்கு அவர்கள் உலகச் சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான அறிவு, வளங்கள், வலையமைப்பு வாய்ப்புகள் என்பவற்றை வழங்கவுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது வியாபாரத்துறையின் முன்னோடிகளையும் எதிர்கால வியா பாரத்துறையில் சிறந்து விளங்கப் போகும் தொழில் முனைவோரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எற்று மதிச் சந்தையை விரிவுபடுத்துவதற் கான புத்தாக்கம் மிகு உத்திகள், தீர்வுகள் குறித்து உரையாடும் வாய்ப்பையும் வழங்கவுள்ளது.

இதில் நிதிமுகாமைத்துவம், சந்தை ஆய்வு, உற்பத்தி அபிவிருத்தி முதலான துறைகளில் பாண்டித்தியம் மிக்க வளவாளர்களினால் நடைமு றைசார் அறிவுரைகளும் பெறுமதி மிக்க ஆலோசனைகளும் வழங்கப் படும்.

இலங்கை வங்கியின் அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் RMN ஜீவந்த இது தொடர்பில் கூறுகையில்,

“நாம் எமது இளம் தொழில்முனைவோரின் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதில் உறுதிபூண்டுள்ளோம். இவ்வாறான நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாம் எமது சந்ததியாளர் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேடுத்துச் செல்லத் தேவையான அறிவையும் திறன்களையும் வளர்த்துகொள்வதற்கான வாய்ப்புகளை நாம் வழங்குகின்றோம்.”- என்றார்.

# சிறுவர்களின் கணிதத் திறனை உயர்த்த செலான் டிக்கிரி - UCMAS இணைவு

நாட்டின் முன்னணி சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமங்க ளில் ஒன்றான செலான் டிக்கிரி, சிறுவர்களின் கணிதத் திறன்களை மேம்படுத்துவதற்காக அபாகஸ் அடிப்படையிலான கற்றல் முறையான Universal Concept Mental Arithmetic System (UCMAS) உடன் சமீபத்தில் கைகோர்த்தது.

பொதுவாகசிறுவர்கள்சலிப்பாகவோ அல்லதுபுரிந்துகொள்ளகடினமாகவோ கருதும் பாடமான கணிதத்தை கற்றல் செயன்முறையை சுவாரஸ்யமாக்குவதன் மூலம் சிறுவர்கள் அதனை சிறப்பாகவும் எளிதாகவும் கற்க உதவுவதே செலான் டிக்கிரியின் இம்முயற்சியின் நோக்கம் ஆகும். இது 4 தொடக்கம் 13 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட திட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த இணைவு, 2024 ஜூன் 25 அன்று செலான் வங்கி யின் தலைமையகத்தில் அண்மைய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தற்போதைய UCMAS மாணவர்களின் திறன்கள் நேரடியாக காட்சிப்படுத்தப்பட்டதோடு கணிதத்தை புரிந்துகொள்ள கஷ்டப்படும் மாணவர்களின் வாழ்க்கையை எளி




தாக்கும் கல்வி முயற்சிகளுக்கு நிதி மற்றும் ஆதரவு அளிப்பதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. சிறுவர்கள் தங்கள் கல்வி ஊடாக சிறந்த பலனைப் பெறுவதற்கு அதனை மகிழ்ச்சியுடன் கற்பது அடிப்படையானது என்பதை நினைவூட்டுவதாகவும் இந்த நிகழ்வு அமைந்தது.

எப்போதும் சிறுவர் நட்புறவான புதுமைகள் மற்றும் முன்முயற்சிகளைத் தேடுவதில் ஆர்வம் காட்டும் செலான் டிக்கிரி, UCMASஇன் தனித்துவமான சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்தமை இலங்கையில் அடுத்த தலைமுறையின் அறிவுசார் திறன்களை வளர்ப்பதில் இரு சாராரதும் பகிரப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

மாற்றத்தை ஏற்படுத்தும் கல்வியை வழங்குவதே UCMAS இன் நோக்கம் ஆகும். மனக் கணித மேம்பாட்டு திட்டத்தை நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் சாதகமான மற்றும் கவனத்தை ஈர்க்கும் கற்றல் அனுபவங்களை எளிதாக்க முயற்சி செய்கிறார்கள். 1993 ஆம் ஆண்டு மலேசியாவில் நிறுவப்பட்ட, UCMAS திட்டமானது ISO சான்றளிக்கப்பட்டதுடன் தற்போது 35இற்கும் மேற்பட்ட இடங்களில் செயற்படுகிறது. அதன் செயற்பாடுகள் இலங்கையில் 2004இல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒரு வர்த்தக நாமமாக செலான் டிக்கிரி எப்போதும் அதன் விழுமியங்களை நடைமுறைப்படுத்த முயன்று வருகிறது. இந்த முன்முயற்சியானது, டிக்கிரி தலை முறையை எதிர்காலத்திற்கு தயார்படுத்துவதற்காக செயற்படுத்தப்பட்ட பல முயற்சிகளைப் பின்பற்றுகிறது. UCMAS உடனான இந்த முன்முயற்சி, டிக்கிரி சிறுவர்களை கணிதத் திறன்களை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கும் அதேவேளை சிறுவர்கள் சிறப்பாகக் கற்க உதவும் ஆக்கப்பூர்வமான உத்திகளைக் கண்டறியும் வண்ணம் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற செலான் வங்கியின் விசேட தொலைபேசி இலக்கமான 011-200-88-88 ஊடாக அழைப்பை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# சியபத பினான்ஸ் பி.எல்.சியின் நாவலப்பிட்டி கிளை திறப்பு

முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி. தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்காக, நாவலப்பிட்டியில் கம்பளை வீதி, இலக்கம் 54 இல் தனது 49 ஆவது கிளையை அண்மையில் திறந்து வைத்துள்ளது.

அதன் நாடளாவிய வலையமைப் பிற்கு புதியதொரு சேர்க்கையான நாவலப்பிட்டி கிளையானது, அதன் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் முழு மையான நிதித் தீர்வுகள் மூலம், வர்த்தக சமூகத்தை வலுவூட்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

கிளையின் திறப்பு விழாவில் சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகா மைத்துவப் பணிப்பாளர் ஆனந்த சென‌விரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள், நாவலப்பிட்டி பிரதேச செயலாளர் ஜே.எம்.ரம்யா ஜயசுந்தர, நகர சபை செயலாளர் பிரியங்கா சாந்தனி உட்பட அரச அதிகாரிகள், களுகம்பிட்டிய, பொது சுகாதார பரிசோதகர் நுவான் கெகுலந்தர, கிராம உத்தியோகத்தர் ஜயலத் பெரேரா, தொழிற்சங்கத் தலைவர் கித்சிறி கருணாதாச, அரசாங்க மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

.புதிய கிளை திறப்பு விழா குறித்து சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகா மைத்துவப் பணிப்பாளர் ஆனந்த சென‌விரத்ன கருத்துத் தெரிவிக் கையில்,

“நாவலப்பிட்டியானது விவசாயத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட பிரதேசமாகும். தேயிலை மற்றும் கோப்பி பயிர்ச் செய்கையில் இருந்து மசாலா உற் பத்தி வரை, மக்கள் விவசாயத்தை தங்கள் முதன்மையான வாழ்வாதார மாகக் கொண்டுள்ளனர். இந்தப் பகுதியில் எங்களது விரிவாக்கம், அவர்களின் தொழில்களை உயர்த்துவதற் கும், அதனால் அவர்களின் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்து வதற்கும் மிகவும் தேவையான நிதி உதவியை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.” - என்றார்.















# பொசன் பௌர்ணமி தினத்தில் அனுராதபுரத்தில் மக்கள் வங்கியின் தொடர் சமய அனுட்டானங்கள்

இந்த ஆண்டு பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு பல்வேறு சமய அனுட்டானங்களை அனுராதபுரத்தில் மக்கள் வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில் அனுராதபுரம் ஜெய ஸ்ரீ மகாபோதிக்கு யாத்திரை மேற்கொண்ட சுமார் 30 ஆயிரம் யாத்திரிகர்களுக்கு காலையுணவாக அன்னதான ஏற்பாட்டை மக்கள் வங்கி ஏற்பாடு செய்ததுடன், 41 ஆவது தடவையாகவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 18 ஆவது தடவையாகவும் பொசன் பௌர்ணமி தினத்தில், அனுராதபுரம் ருவான்வெலிசாயவில் மகத்தான சமய அனுட்டான நிகழ்வையும் மக்கள் வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு பங்களித்து, ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் கருணாரத்ன விஜேவர்த்தன தலைமையில் விசேட நிகழ்வும் இடம்பெற்றது.

மக்கள் வங்கி ஊழியர்கள், அனுராதபுரம் நிவந்தகஷேதிய தேசிய மையத்தின் மாணவ, மாணவியர் நிகழ்வை முன்னெடுத்தமை சிறப்பம்சமாகும். மக்கள் வங்கி அனுராதபுரம் பிராந்திய தலைமை அலுவலகத்தால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சங்கைக்குரிய நாயக்க தேரர்கள் பலரும் கலந்து ஆசிர்வாதங்களை வழங்கிய இந்த சமய அனுட்டான நிகழ்வுகளில், மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச, பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா, அனுராதபுர மாவட்ட ஆணையாளர் ஜனக ஜயசுந்தர, மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (வங்கி உதவிச் சேவைகள்) நிபுணிகா விஜயரத்ன, பிராந்திய தலைமை அதிகாரி நதீகா விஜயவர்த்தன, பிரதிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்) நதீன் பத்திரணகே, அனுராதபுர பிராந்திய முகாமையாளர் அசித தனவிதிவிதான, உதவிப் பிராந்திய முகாமையாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வங்கி ஊழியர்களும் கலந்து கொண்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 07.07.2024




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரணையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக் கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.07.2024

## தனுசு

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப்ப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

## மகரம்

இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணை யாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கும்பம்

இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள்.

## மீனம்

உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

